சொபக்கிளிசின்

"மன்னன் எடிபசு"

(நாடகம்)

A/L

நாடகமும் அரங்கியலும்

(புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக)

நாடக பாடம்

பதிவாசிரியர்:

திரு. கந்தையா ஸ்ரீ கந்தவேல் B. A.

ஆசிரியர், மானிப்பாய் மகளிர் கல்லூரி

SOPHOCLES

"OEDIPUS KING"

A/L

DRAMA AND THEATRE

(NEW SYLLABUS)

DRAMA TEXT

EDITOR:

MR. KANDIAH SRIKANTHAVERL, B. A.

Teacher, Manipay Ladies' College

மு க வு ரை

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பத்திரம் பரீட்சைக்கான 1997ல் அறிமுகப்படுத்தப்படும் புதிய பாடத்திட்டத்திற்கமைய, நாடகமும் அரங்கியலும் என்ற பாடத்துறையில் நாடக இலக்கியங்கள் (நாடக பாடம்) இணைத்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

நாடகமும் அரங்கியலும் என்ற பாடத்தினைக் கற்கும் மாணவர்களின் நலன் கருதி "மன்னன் ஈடிபசு" நாடகத்தினை தட்டச்சில் பொறித்து வெளியிட எண்ணினேன். அந்த வகையில் திரு. இ. இரத்தினம் அவர்களால் தமிழாக்கம் செய்யப்பட்ட நாடகத்தினை யான் அப்படியே உங்களுக்கு தட்டச்சில் பொறித்துத் தருகின்றேன்.

காலத்தால் முத்த நாகரிகங்கள் என்ற வகையில் கிரேக்கமும் ஒன்று. கலைகளின் தொட்டில் என வர்ணிக்கப்படும் சிறப்புக்குரியது கிரேக்கம். கூட்டம் சிற்பம், இசை, நடனம், நாடகம் என்பனவற்றுடன் இலக்கியக் கலையிலும் சிறப்புற்று விளங்கியமையை அங்கே கண்டு பிடிங்கப்பட்ட இலக்கியங்கள் சான்று பகர்கின்றன. அந்த வகையில் நாடக இலக்கியங்கள் என்னும் வகையில் நாற்பத்தைந்து நாடக எழுத்துருக்கள் கண்டு பிடிக்கப்பட்டன. அவற்றுள் அவலச்சுவை, மகிழ்நெறி, சற்றயர் நாடக எழுத்துருக்களும் அடங்கும். இவற்றுள் அவலச்சுவை நாடகங்கள் சிறப்புக்குரியது. அவற்றுள் சொபக்கிளிஸ் என்ற அவலச்சுவை நாடகாசிரியருடைய நாடகங்கள் மிகவும் சிறப்புக்குரியது.

சொபக்கிளிஸ் அழகு, இசைத்திறன், மெய்வல்லமை, நிதானம் நேர்மையும் கொண்ட ஒரு கலைஞன். எனவேதான் இவருடைய வியத்தகு பல்திறனை அவரது நாடகங்களில் காணக் கூடியதாகவுள்ளது. இதனால் கற்பாறையின்கீழ் நசியுண்டு இறக்கும் கண்களைப் பிடுங்கி எறிந்து இறக்கும் கதாநாயகர்களைத் தனது நாடகங்களில் கொண்டு வந்தார். இவர் 120 நாடகங்களை எழுதியதாக கூறப்பட்டாலும் இன்று நமக்குக் கிடைப்பவை ஏழு மட்டுமே. இவற்றுள் மன்னன் ஈடிபசு, அன்ரிக்கனி ஆகிய நாடகங்கள் தன்னிகரில்லாத நாடகங்களாகும். இந்நாடகங்கள் சிறந்த நாடக அமைப்புடையன. பாத்திரம் படைப்பு மிகச் சிறந்தது. உரையாடல்களைச் சிறப்புடன் அமைத்துள்ளார். இவருடைய நாடகக் கதைப் பொருள் எளிமையானதாக அல்லது மிகச் சிக்கலானதாக ஆக்கினார். இந்தவகையில் மன்னன் ஈடிபசை மிகவும் சிக்கலானதாக ஆக்கினார் வாழ்வின் துன்பங்களை உணர்த்தினார். வாழ்வு ஒரு கனவு என்ற எண்ணத்தை முதன்முதல் கூறினார். கிரேக்க அரங்கு கடும் மரபுகளால் பிணிக்கப்பட்டிருந்த போதிலும், இவரது நாடகங்கள் மனிதப் பண்புகளின் அடிப்படை இயல்புகளை வெளிக் கொணர்வதன் மூலம் எமது இதயங்களுக்கு அருகே நெருங்கி வருகின்றார்.

மன்னன் ஈடிபசு என்ற நாடகத்தின் கதைப்பின்னல் மிகவும் புத்தி பூர்வமான தொன்றாக விளங்குகின்றது. நம்பமுடியாத ஒன்றாக இதன் கதைக்கரு அமையினும் நாடகாசிரியர் சிறந்த அவல நாடகமாக்கியுள்ளார். அவல நாடகம் என்றால் என்ன என்பதற்கு இலக்கணமாக இந்நாடகம் விளங்குகின்றது.

விதி, என்ற சிந்தனையே இந்நாடகத்தின் அடிப்படையிலேயே சொப்க்கிளிஸ் இந்நாடகத்தை உருவாக்கினார் அத்தொல் கதையின் சுருக்கம் வருமாறு;

தீபசு நாட்டின் மன்னன் இலயசு, இராணியோகதா, அந்நாட்டின் தெய்வ வாக்கு இவர்கள் பற்றி ஒரு முன்னுரை கூறியது இவருக்குப் பிறக்கும் மகன் தந்தையைக் கொன்று தாயை மணம் முடிப்பன் என்பது ஆய்வுரை. இவர்க்குப் பிறந்த ஆண்மகவு கால் குத்தப் பெற்றுக் காட்டு மலையின் இறக்குமாறு விடப்பெற்றான். அங்கு ஓர் இடையனிடம் இம் மகவைக் கண்டெடுத்துப் பிறிதோர் ஆட்டிடையனிடம் கொடுக்கிறான் அவன் அதைக் கொரிந்து நகர் எடுத்துச் சென்று அந்நகர் மன்னனிடம் கொடுக்கிறான். அம்மன்னன் அம்மகவைத் தன் மகனென வளர்த்து வருகிறான். அங்கு இம்மகவு ஈடிபசு (கதை காலன்) என்ற பெயரில் வளர்கிறான். இங்கும் இந்நாட்டுத் தெய்வக குறி ஈடிபசை வருத்துகின்றது. தன் தந்தையைக் கொன்று தாயை மணப்பன் என்பதே இங்கும் அவன் பெற்ற முன்னுரை நெருவத்தி அவன் கொரிந்தை விட்டோடுகின்றான். வழியில் அவன் ஒரு சிற்றரசனையும் அவன் ஏவலர்களையும் சந்திக்கிறான். அங்கு இவர் கருடன் எழுந்த பிணக்கில் இவன் அவர்கள் எல்லோரையும் கொல்கிறான்.

தீபசை நாட்டைச் சிபிங்சு வருத்தும் தருணத்தில் இவன் அங்கு தோன்றுகிறான், சிபிங்சு அளிக்கும் புதிர்களை விடுத்து இவன் நகரைக் காற்பாற்றுகிறான். பின் இவன் கைம்பெண் அரசியான யோகதாவை மணக்கிறான். பல பிள்ளைகள் பெறுகிறான். பல்லாண்டு வளம் பெற்று ஆள்கிறான். ஆயினும் பின் தீபசைப் பஞ்சமும் நோயும் வாட்டின.

இலயீசைக் கொன்றவன் தண்டிக்கப்படவில்லை யாதலினால் கடவுளர் கோபிப்பர் என்று தெய்வக் குறி கூறுகின்றது. அப்பொழுது அக்குற்றவாளி தானே என்றும் யோகதா தன் தாயென்றும் அறிகிறான் பின் அவன் தன்னைத் குருடனாக்கி நாடு துறந்து போகின்றான். பின் இவன் அதென்சில் இறக்கிறான்.

30.08.1996

திரு. க. ஸ்ரீகந்தவேள்
ஆசிரியர்.
மானிப்பாய் மகளிர் கல்லூரி.

பேரசிசு – வட கிரீசிலுள்ள ஒரு நாடு
மதனிகை – மருட்டுப்வன்
மெரோபி – பொலிபசின் மனைவி
வீபசு – பீபசு
மயனாட்டு – வெறிதரும், வெறிக்கடவுள் சார்ந்த
மெனோசியசு – கிரயன், யோகதா ஆகியோரின் தந்தை

தீ ப சின் தொ ல் க தை

****

தீபசுநாடு போசியா எனும் பெருவெளியிருந்தது. போசியா அதென் நாட்டிற்கருகில் வடக்கே ஓர் ஒடுங்கிய நிலப்பரப்பாயமைந்திருந்தது. தெல்பி எனும் தெய்வமொழித்தலத்தின் துணையோடு கதுமசு முதன்முதலாக ஒரு நகரை நிறுவினான். இவன் அகனர் அரசனின் மகன். இந்நகரை நிறுவி முடிக்குமன்னரே இவனுக்குப் போரிடர்கள் நேர்ந்தன. இந்நாட்டிற்கண்மையிலுந்த பள்ளத்தாக்கில் இருந்த ஒரு பெருவிலங்கு இவனின் தோழர்கள் எல்லோரையும் விழுங்கிவிட்டது. ஆயின், கதுமசு ஒரு வீரனாயிருந்தபடியால் அதனுடன் போரிட்டு அதைக் கொன்று விட்டான். இந்தப் பெருவிலங்கின் பல்லினை இந்நகரில் விதைக்குமாறு இவனுக்குத் தெய்வ ஆணை பிறந்தது. இவன் அவ்வாறு செய்தனன். உடனே நிலத்திலிருந்து பொல்லாதவையும் படை யுண்டவையுமான பல பூதங்கள் தோன்றி தம்முள் முரண்பட்டுக் கடுஞ்சமர் புரிந்தனர். இறுதியில் ஐவரே எஞ்சினர். இவர்கள் கதுமசிற்குப் பணிவுணர்; இவர்கள் கதுமசுடன் சேர்ந்து தீபசு நகரைத் தோற்றியோர் ஆயினர்.

கதுமசிற்குப் பொலிதரசும், பொலிதரசிற்கு இலபகசும், இலபகசிற்கு இலயசும் மக்களாகப் பிறந்தனர். இலயசு யோகதாவை மணந்து ஒரு மகனைப் பெற்றான். இவனுக்கு ஒரு பெயர் அளிக்குமுன்னராகவே, பிறப்பதற்கு முன்னராகவே, இவன் வாழ்வு சாபத்திற்குள்ளாகியது. அப்பலோவின் முன்னுரை இவனுக்குக் கேட்டைத் தவிர நன்மை சொல்லவில்லை. இம் மக்ன் தந்தையைக் கொன்று தாயை மணப்பான் என்பது அந்த உரை, கடவுள் உரைக்கு எதிராக எந்த மானுடம் போராடமுடியும்? எவன் தப்ப முடியும்? இலயசும் யோகதாவும் அவ்வுரையை நம்பினர். இவர்களுக்கு ஆறுதலளிக்க ஒரேயொரு வழி இருந்தது. அக்குழந்தையை உயிருடன் விடலாகாது என்பது தான் அது. குழந்தையைக் கொல்லும் பாவத்தை அவர்கள் தாங்களே மேற்கொள்ள விரும்பவில்லை, எனவே, அவர்கள் தம் பணியாளான ஆயன் ஒருவனிடம் குழந்தையைக் கொடுத்து அதை அயலில் உள்ள மலைச்சாரலில் விட்டுவருமாறு பணித்தனர். கொடுக்குமுன், குழந்தையின் கால் இரும்பு ஆணியால் துளையிடப்பட்டு அது தவழமுடியாமற் செய்யப்பட்வேண்டுமென்பதும் அவர்கள் கட்டளை. தவழ்ந்தால் அது தப்பிப் பிழைத்துவிடுமென்று அவர்கள் அஞ்சினார்கள்.

இப்பணி நிறைவேற்றப்பட்டது. எனினும் மனிதனின் இரக்கப் பண்பும் அப்பலோவின் ஆணையும் நிலைநின்றன. ஏனெனில், அக்குழந்தையை மலையடியிற் சாக விட அவ்வாயனுக்கு மனம் வரவில்லை. அவன் மலையடியிற் குழந்தையை விடவில்லை. கொரிந்திலிருந்து வந்த ஆயன் ஒருவனிடம் கொடுத்து அதைத் தீபசு நகரின் எல்லைகளுக்கு அப்பால் எடுத்துச் செல்லுமாறும் அவனே அதை வளர்க்குமாறும் வேண்டினன். இவ்வாயன் கொரிந்தின் மன்னன் பொலிபசு என்பானின் பணியாள் ஆதலின், அவன் இக் குழந்தையைத் தன் அரசனிடம் எடுத்துச் சென்றான். இகாரிந்தின் அரசனுக்குக் குழந்தையில்லாதபடியால் அக்குழந்தையை மகிழ்ச்சியுடன் வரவேற்றுத் தன் குழந்தைபோல் போற்றி வளர்த்து வந்தான். இக் குழந்தையின் கால் ஆணியின் துளையால் வீங்கியிருந்ததால் அக்குழந்தைக்கு ஈடிபசு (கதைகாலன்) என்ற பெயரளித்தனன் அவ்வரசன்.

இங்கு ஈடிபசு கொரிந்தின் இளவரசனாக வளர்ந்து நற்பெருவமெய்தினன் பொலிபகையே இவன் தன் தந்தையெனக் கருதினான். தற்செயலாக இவ்ன் ஒரு நாள் அப்பலோவிடமிருந்து தன் எதிர்காலத்தை அறியவேண்டி நேர்ந்தது. முற்கூறிய உரையே இங்கும் கூறப்பட்டது. தன் பெற்றோரைப் போலவே இவனும் அப்பலோவின் முன்னுரையைப் பொய்ப்பிக்க விரும்பினான். எனவே, இவன் கொரிந்திலிருந்தும் வெளியேறி நாடுகளிடை அலைந்து திரிந்தனன். இவ்வாறு இவன் அலைந்து திரியுங்கால் தீபசு நகரிற்கு வந்தனன். இங்கு குழப்பமான நிலை நிலவியது. அரசன் இலயசை இனந்தெரியாக் கள்வன் ஒருவன் தெருவிற் கொலை செய்தனன். நாட்டைச் சிபிங்சு எனும் ஒரு பொல்லா விலங்கு வருத்தி வந்தது. இவ்விலங்கு புதிர்கள் கேட்பது வழக்கம் அப்புதிர்களுக்கு விடை கூறத் தவறும் மனிதர்களை இவ்விலங்கு கொன்றழித்தன

அகனர் – கதமசின் தந்தை
அதினா – பலாசு
அப்பலோ – ஒரு கிரேக்க தெய்வம். ஞாயிற்றுத் தெய்வம்
அபயடி – ஒரு நகர்
அன்றிகனி – ஈடிபசின் ஒரு மகள்
ஆட்டமி – ஒரு பெண்தெய்வம். சுன்னியரின் அழகே உருவான தெய்வம்
இசுமென் – ஈடிபசின் மகள்
இசுமீன் – ஓர் ஆறு
இலபகசு – பண்டைத் தீபசு மன்னருள் ஒருவன். இலயசின் தந்தை
இலயசு – இலபகசின் மகன்; ஈடிபசின் தந்தை
இலிசயன் – அப்பலோ
இலிசியன் – இலிசியா எனும் மலைநாட்டிற்குரிய
ஈடிபசு – தீபசு நகரின் இலயசிற்கும் இராணி யோகதாவிற்கும் மகன்
ஈசுமசு – கிரேக்க நாட்டுப்பகுதி
உலிசாட்சியசு – அப்பலோ
எலிகன் – ஒரு மலையடுக்கம்
ஒலிம்பசு – ஒரு மலையடுக்கம்
கதமசு – அகனரின் மகன். இவனே தீபசு நகரை நிறுவியவன்
கிரயன் – யோகதாவின் சகோதரன்
குழு – தீபசு நாட்டுப் பொறியாளர் குழு. குழுவிற்காகத் தலைவன் பேசுவது வழக்கு.
கொரிந்து – ஒரு நகர்
சிதரன்/சித்திரன் – ஒரு மலையடுக்கம்
சிபிஞ்சு – ஒரு பெண்பேய். இவள் தீபசு நகர் மக்களுக்கு நொடி சொல்லி அதற்கு விடையளிக்காதவர்களைக் கொன்றாள். ஈடிபசு இவளை வென்றான்.
சிலீன் – ஓர் உயர்மலை
சூசு – கிரேக்கர் கடவுளர்களுள் உயர்கடவுள் விண்ணிற்கு இறை.
தயோனிசு – மதத்தெய்வம். ஆதியில் வனத்தெய்வம்
தீபசு – ஒரு நகர்
தெல்வி – ஒரு நகர்
தெலோசு – ஒரு தீவு
கொரிசு – கிரீசில் ஒரு மலைநாடு
தெளலியா – ஒரு நகர்
பக்கசு – தயோனிசசு; மதுவின் தெய்வம்
பலாசு – அதினா. கிரேக்கர் தெய்வங்களுள் ஒன்று அறிவு முயற்சி முதலியவற்றின் தெய்வம்.
பானசு – தெல்பிக்கு வடபாலுள்ள ஓர் உயர் மலைச்சிகரம்
பிதியன் – பிதியம் எனும் நகரிற்குரிய
பீபசு – அப்பலோ
பைதோ – அப்பலோ
பொலிதரசு – கதமசின் மகன், இலபகசின் தந்தை.
பொலிபசு – கொரிந்து மன்னன் ஈடிபசை வளர்த்த மன்னன்.

ஒருவரேனும் சிபிஞ்சின் புதிர்களுக்கு விடை கூறி அதை வெல்ல முடியவில்லை. ஆயின் ஈடிபசு சிபிஞ்சின் புதிர்களுக்கு விடை கூறினான். அதன் ஆற்றலை அறிந்தான். அதனால் தீபசு அவனை மகிழ்ந்து வரவேற்றது. தீபசு அவனை அந்நாட்டு மன்னனாக வரவேற்றது. அரண்மனைக்கும் செல்வத்திற்கும் உரியவனாகவும் வரவேற்றது. இங்கு இவன் மகிழ்வுற்றான். சீர் அறிவாளியெனவும் ஆற்றலுடையானெனவும் பெயர் பெற்றான் அமைதியை விரும்புபவன் எனவும் பெயர் பெற்றான். கொரிந்திலிருந்து தீபசிற்கு வரும் வழியில் நடந்த ஒரு செயல் மட்டும் இதற்கு விதிவிலக்காக விளங்கியது. இவன் யோகதாவை மணந்து புதல்வர் புதல்விகளைப் பெற்றான்.

பதினைந்தாண்டுகள் நாடு செழிப்புற்றோங்கியது. ஆயினும் ஏமாற்றமான் ஒரு தோற்றப்பாட்டின் கீழ் பொல்லாத ஒரு சீரழிவும் அவமானமும் மறைந்து கிடந்தன. ஈடிபசு தன்னை அறியாமற் செய்த பாவங்களுக் கடவுளர் இனி மன்னிக்கக்கூடியவராய் இருக்கவில்லை. வறுமையும் கொள்ளைநோயும் தீபசை மீண்டும் வருத்தின. இந்நிலையால் வருந்திய மக்கள் மீண்டும் தும்பத்தினின்றும் தம்மைக் காக்குமாறு ஈடிபசை வேண்டினர். ஈடிபசோடு அப்பலோவையும் சேர்த்து வேண்டினர்.

(இதிலிருந்து முன்னன் ஈடிபசு நாடகம் தொடங்கும்)

மன்னன் ஈடிபசு
****

காட்சி: தீபசிலுள்ள அரண்மனை முன்

அரண்மனை முன்றிலிலுள்ள படிகளிலும் பீடங்கள் மீதும் தீபசுக் குடிமக்கள் பலர் கூடி இறைஞ்சும் பான்மையில் உள்ளனர். நடு வாயிலிலிருந்து ஈடிபசு வருகிறான் ஏவலர் சூழ்ந்துளர்.

ஈடிபசு: மக்காள்! கதமசு முதுமரபு ஈன்ற
தக்கநற் புத்தினஞ் சேய்காள் ! திரண்டுநீர்
வணங்குவதேனோ? இணர், தளிர் மாலைகள்
நகரை மொய்த்திடும் நறுமனம் இன்னல்
அகற்றிடப் பறாவல், அழுகுரல் எழுமிவை
எதற்கு? என்னாதல் இயம்பிய உளந்தனில்
பதிக்க ஒருப்படாது, பார்புகழ் பரப்பிய
ஈடிபசு யானே ஈங்கு வந்துளன்
நடந்ததை யறிய. (குருவை நோக்கி)
நலத்திரு பெரியோய்!
அகவையின் பெருமையால் அவர் பொருட்டு இயம்புதல்
தகுமிவண் உமக்கே. தளர்வும் அச்சமும்
தகுமோ? இங்கு நேர்ந்தது யாதோ?
வேண்டிய வாங்கு நினைசெயல் என்கடன்.
இத்தகை வேண்டற் கியையாது விடுவனேல்
இதயமில் செவிடன் எனவெனைத் கூறுக.

குரு: இறைவா, வேந்தே ! எம்மொழி கேட்பீர்,
நாகிளம் சிறாரும் முதுமையின் நலிந்த
கிழவரும் ஈங்கு கெழுமியது கண்டனை.
ஆண்மையில் செம்மையோர் அரசொடு குருமார்
ஈண்டிய யாவரும் ஈங்குளர். இவ்வகைத்
தளிர்களைத் தாங்கிய கிளைஞர் பல்லோர்
அங்காடி மருங்கில் இசுமீன் ஆற்றின்
அங்கரைப் பலாசின் இரட்டைப் பலிகொள்
வேதிகை தன்னிலும், வருவழி உரைக்கும்
தீதுதீர் புலத்தும் செறிந்துளர் காண்பீர்.
மீள்வளி தோற்றா மாள்வளி, தீயில்
பாழுறும் எங்கள் பட்டன மக்களைப்
பெரும நீர் கண்ணுற்றிருக்கலாம். இறப்பே
இறப்பு ! பலன்தர இயலும் மண்ணில்
இறப்பு; கருவியில் இறப்பு. கன்னியர்
சூற்பையில் சிதைவு சூழ்ந்திந் நகரைப்
பாழ்த்திடும் கொள்ளைநோய் கதமசுக் குலமுறை
வீழ்த்தி, ஆழ்துயர் அதனால் நிரயம்
நிறைத்திடும். நானும் இச்சிறாரும் எம்துயர்
குறைதமைக் கூறிட உம்மடி உற்றது,

விண்ணவர் நிகர்த்தனை என்பதால் அன்று.
மனதின் வாழ்வொடு மன்னிய அலவலில்
அவளின் உயர்ந்ததை ஆட்கொளும் இயல்பில்
மண்ணுறை மக்களுள் முதல்வன் என்பதால்
கதமசு தலைதகர் புதிது புகுந்து
கொடிய மதனிகை கயமை உடைத்து,
விடுதலை நல்கிய விறலோய் நீயே!
எம்மவர் குறிமொழி, எதிர்வறிவு, யாதும்
இன்றி இறையனை ஒன்றே கலமாய்
நயந்தெமக் கருளி உயிர்புதிது அளித்த
பெருமான் நீயே! புகழும் மாண்பும்
பொருந்தினை ஈடிபசு, பேர்த்தும் உம்முனை
இரந்தனம் பெறுமு. நரரோ தேவரோ
நல்கும் துணையுடன் நலம்புரிந் தாள்வாய்.
இறந்த காலம் இற்றை அறிவிற்கு
உறுதுணை அளிப்பது உணர்ந்துளோம், எனவே
மாந்தருள் உயர்ந்தோய் எம்நகர் உயிர்பெறச்
சூழ்ந்திடல் உம்கடன், உம்திற்பன் மைமை
உயர்த்திய தறிந்தோம். பெயர்த்தும் வீழ்ந்தவே
உயர்த்தினை, எனப்புழி உரைக்கவோ, சூழ்ந்தனை.
எம்நகர் புரப்பாய்; என்னும் புலராது
இந்நகர் பேணல் உம்கடன் கண்டாய்.
அற்றை நாள் எமக்கு அருள்வளம் நல்கிய
நற்கோள் சுட்சியில் இன்னும் நமக்கு
இன்வலம் காட்டுவை. இன்னலாறு எம்
இறையெனும் நிலையது நிறுவுதல் வேண்டின்
பாழிற்கன்றி வாழ்விற் கரசன்
ஆகுவை, பெரியோய்; அரணோடு நாவாய்
சமைத்துமென்? அவற்றுள் அமைந்தவர் நெஞ்சில்
உரனும் உயிரும் கதுகின ஆயின் !

ஈடிபசு: மக்காள் உம்மியர் கேட்டுளம் மாய்ந்தனன்.
நீவிர் படுந்துயர் என்பால் வேண்டும்,
யாவும் அறிகுவன். நவிர் வருந்த
என்னினும் வருந்துவார் யாருளர்? உம்மவர்
மனநோ பலப்பல உனினும், அவரவர்
தனியகம் பட்டவை. என்னதோ, என்னகப்
படுவோடு உம்பசு, என்குடி மன்பதை,
உளத்துயர் யாவிம் அழுந்திய படுவாம்.
துயிலுதல் அறியாது கலுழுமென நெஞ்சம்
எண்ணிலி கோடி எண்ணுமென் உள்ளம்,
எனினும் அயர்ந்திலன். நயந்தரும் விளையென்று
எலவே முடித்துளன். என்மொழி என்செயல்
தெதான் உம்மியர் துடைக்குமென்றறிய
மெனோசியசு மைந்தன் என்தன் கிரயனை
தன்னை அப்பலோ பிதியன் அகம்நான்
அனுப்பினேன் மீண்டிவன் அவன்வரும் நாளிது.
இதுவரை அவன் வரலுதை நினைந்தென்மனம்
கவலும். ஆயினும் அவன் கொளர் தெய்வ
ஆணை யாதும் ஆகுக. என்றல
மாண்பினாணை முடிப்பன் அதைநான்.

குரு: நன்று சொல்லினை
(தொலையில் யாரோ வருவதை அவர் காண்கிறார்)
நோக்குக அத்திசை.
கிரயன் வருகையை மக்கள் தெரிப்பதை
உணர்க; கிரயனும் இவ்விடம் உற்றனன்

ஈடிபசு: (பார்த்துக்கொண்டே)
இன்முக மலர்வுடன்; அப்புசேர் அப்பலோ!
அன்னவன் செய்தியால் நன்மை யாகுமோ!

குரு: நன்றது ஆகும். கனிபழம் வெம்முடி
தாங்கிய தவந்தலை. அஃதோர் சின்னமே.

ஈடி: விரைவில் அறிகுவம்; அருகவன் அடைந்தனன்.
அரசுச் சோதர! யாது செய்தியோ?
இறைபகர் செய்தியை எமக்கு எடுத்துரைக்க

கிரயன்: நல்ல செய்தியே; எல்லாம் நலம்பெற
இயலின் நன்மையும் இயர் சேர் செய்கையில் எழுமே

ஈடி: விடையினை மொழிக. நம்பும்
பயமும் மாறி மயக்குமே எம்மை

கிர: யாவர் முன்னிலும் இயம்பெனப் பணித்திடில்
இயம்புவன்; இன்றேல் இல்லுள் இயம்புவன்.

ஈடி: என்னுயிர் இவர் விதி தன்னிலும் பெரிதன்று.
எனவே மொழிகுவை யாவர் முன்னிலும்.

கிர: எனினே மொழிகுவன். இதுவே மறைமொழி.
எம்மிறை வீபசு ஆணையும் அதுவாம்.
எம்மனும் மன்மிசை எழுந்து தழைத்த
கறையொன்றுள்ளது. கடிந்ததை ஓட்டல்
முறையாம். இன்றேல் மன்னிதில் கறைமுளைத்
தெம்மையே கொன்றிடும்.

ஈடி: இயம்புக; கறையெது?
செம்மை சேர்த்திடச் செய்ய வேண்டியது
யாதென விளம்புக; ஆவன செய்வேன்.

கிர: நாம்டிற் குற்ற கேட்டின் காரணம்
செந்நீர் சிந்திய தன்மையதாதலின்,
குருதி பொருட்டுக் குருதி. இன்றேல்
நாட்டின் நின்றும் ஓட்டுதல் ஆகும்.

ஈடி: குருதி எவவர் கருதுவ தியாது?
இறந்தவன் யாரென இயம்பிய துண்டோ?

கிர: தலைமை கொண்டெமை நீர் தாங்குமுன், ஆண்டவர்
இலயசு எனப் பெயர் ஏற்றவேர் அரசர்.

ஈடி: அவரை நான் கண்டிலேன். ஆயினும் அறிவேன்.

கிர: அவர்கொலைப் பட்டனர்; அறியாக் கொலையதைப்
புரிந்தவன் தன்க்கு மூறைமை வழங்குமாறு
இறைவன் பணித்தனன்; இதுமிகத் தெளிவாம்.

ஈடி: யாண்டுளன் கொலைஞன்? என்னரும் தென்மையின்
மாண்ட கொலையின் நினைவரு சுவடுகள்
காண்ப தெங்ஙனம்?

கிர: காண்பாய் ஈங்கெனக்
கழறினன் இறைவன். கேடுக காண்பாய்.
நாடத் தவறில் காணத் தவறலாம்.

ஈடி: வீட்டிலோ, களத்திலோ, வெளியிலேர், அயலார்
நாட்டிலோ, இலயசு படுகொலைப் பட்டனர்?

கிர: 'புண்ணியப்பயணம் கொண்டனன்' என்றவன்
நாட்டைவிட் டேகினன். நாள்பல கழிந்தும்
வீடவன் மீண்டதை நாம்பின் கண்டிலேம்.

ஈடி: நேர்ந்தது பற்றியோர் வார்த்தையு மில்லையேர்?
பயன்படு முறையில் புனைந்தவோர் நேர்முக
வழித்துணைச் சான்றும் வாய்க்க வில்லையோ?

கிர: பயத்தினில் புலம்பெயர்ந் தோடிய ஒருவனைத்
தவிர யாவரும் ஒழிந்தனர். அவனும்
ஒன்றைத் தவிரவே றொன்றும் கூறிலன்.

ஈடி: அதுதான் யாதோ? ஒன்றை ஓர்ந்திடில்
எத்துணைச் சிறிய உளவே ஆயினம்
அதனைத் தொடர்நது நாம் அனைத்தையும் அறியலாம்.

கிர: மன்னன் மக்களைப் புன்னெறிக் கள்வர்
கொன்று வழ்த்தினர் என்பதே அவன்மொழி.

ஈடி: இத்தலத் துள்ளார் நிதிகொடுத்து எவின்
அல்லால் இத்துணைப் பொல்லா வினையினை
ஆற்றல் கூடுமோ ஆறலை கள்வர்க்கு !

கிர: அவ்வுரை கேட்டுளோம். ஆயினும் தொடர்ந்த
எவ்வம் பலவும்ம் எவரும் கொலைஞரைப்
பழிகொள வந்திலர்.

ஈடி: அளவிலா எவ்வம்!
அரசுக் கொலையை அறுதியாய் உசாவலை
தடைசெயும் தகைமை உடையரும் உளரோ?

கிர: புரிய மறைகளில் புத்தியை விடாது
உரிய அலுவலில் உடன்மனம் கொள்ளுக
என்றே சிபிக்சும் தன்பெரும் புதிர்களால்
தாண்டிய தெம்மை.

கூடி: மீண்டும் புதிதாய்
இம்மறை வெளிப்பட அடையறாது உழைப்பவர்
எம்மிறை வீபசு வாழ்க! நன்றிநின்
அருவினை குறித்தே. இறந்தவர் கடனறி
வுறுத்திய உன்றன் நற்பணி சிறந்தது.
இறைபணி, நாட்டின் பொற்பணி, யாவிலும்
உன்றனை யாக உழைப் பன் உவந்தே.
பணிய எனதுமாம். புறத்தவர் மாட்டமை
மாசகி அன்றியும், என்னகந் தொட்ட
தீதுமே தீர்ப்பன்நான். இலயைத் தீர்த்தவன்
எனவே, அன்னவன் என்னையும் தீண்ட
எண்ணுவன் அல்லனோ. எனவே இலயசின்
பணியென் பணியுமாம். நன்றென் மக்காள்!
எழுவீர்; கொடிஞழை களைவீர், கதமசுக்
குடிமகார் இங்கே குழுமச் செய்வீர்.
அன்னவர் வேண்டிய தனைத்தும்நான் செய்வனே,
என்றவர்க் கியம்புக, இறையருள் அதனால்
இயலுமெம் வாழ்வு. இல்லையேல் வீழ்வே.
(ஈடிபசு அரண்மனையுள் செல்கின்றான். மக்களையழைக்கத்
தூதுவன் செல்கின்றான். குரு விண்ணப்பம் செய்தேரை அகற்றுகிறார்)

குரு: எழுவீர் மக்களள் விழைந்தவை யாவும்
அளிப்பன் என்றெம் அரசன் உறுதி
கூறின்ன். செய்தி கூறிய வீபசே
எழுந்திவன் வந்தெமைக் காக்க வழுத்துவம்.
(மக்கள் கலைகின்றனர். தீபசு நாட்டு முதியோர் குழு வரல்)

குழு: ஒளிநகர்த் தீபசின் பிதியன் பொன்மனை
கிளர்ந்தெழும் கருணை விண்ணொளி கேட்டோம்
எம்மகம் பயத்தால் ஏக்குறும்,
வருவது நினைந்து மலைத்திடும்.
தெலோசின் புரவல, செவிகொளீர் எம்மொழி.
அலைக்குமே அச்சம் ஆருயிர் தன்னை.
எம்மை நீர் காக்க என்செய்வீர்! அரசே!
புதியது முயல்விரோ, அதுதான் ஒழித்து
சுழலும் ஆண்டுபோல் பழையது முயல்விரோ!

அழியா நம்பின் அரும்பெரும் புதல்வி!
இழிவே இல்லா மொழியோய்! முதல்வி!
சூசின் முதற்பெரும் செல்வி, அமர
அதினா! நின்னையே அழைத்தனம். நின்னொடு
உள்ளரும் மாண்புற எம்நகர் அமர்ந்த

உன்னரும் சோதரி ஆட்டமி தன்னையும்
வில்லிறை வீபசு தன்னையும் வேண்டினம்.
பண்டு நின் முப்படி பலத்தை விளக்கினாய்;
இன்னும் மீள நின்பலம் காட்டுவாய்.
கொள்ளை, தீத்துயர்க் கொடுமை நீக்கி
விழுமிய வாழ்வு நல்குவாய்.

சொல்லரும் துயரம் சூழ்ந்தெம் மக்களை
வெல்லரும் பிணியில் வீழ்த்துதல் கான்க.
மருந்துகான் கதியிலும் வருத்து மந்நோய்.
விளைவு கழனியில் பழுது கொள்ளை;
மலட்டு வயாவின் அலறல் ஒருபுறம்;
காட்டுத்தீயில் கனென்றெழும் உயிரெலாம்
பாழிருள் பாயும்.

புகலரும் பாங்கினில் நகர்த்தெரு யாங்கணும்
சாநடம் புரிந்தே சாப்பல விளைக்கும்.
மாநகர் மக்கள் மாள்தலைக் கண்டு
புலம்புவார் இலரே; இயல்பல ஆலயம்
அன்னையர் தொழுவர்; பொன்னுளம் படைத்தேய்,
புன்னிய அதினா! கண்ணீர் அரவம்
காதில் விழுலையோ! கடிதில் வருவாய்.
மாசில் அப்பலோ! மாய்க்கும் எம்மையும்
கேட்பாய், கடிவாய்;

கேடுறு வெங்கல
ஒலிச்சமர் இல்லையே எனினும், சாப்பேய்
அலமரச் சமர்மிக ஒலிப்பது கான்க
தொலைகடற் படவோ, இல்லையேல் யாதமோர்
எழுகுடாப் படவோ படைக்கலம் அனைத்தையும்
வீழ்த்துக. பெரும் சூழிருள் படர்நோய்
துன்பப் பகலெனத் தொடருமே. சூசு!
நின்னிடி வாட்டுக, மின்னல் கொல்க!
இலிசயன்! நின்பொன் வில்லினால் கொல்க.
இலிசியன் மலையிடை இயங்குநல் ஆட்டமி!
கொல்க, அவனை.

மயனாட்டுக் களியினில் மகிழ்புற ஆடிடும்
பக்கசு எங்கோன்! பங்கமில் யுவோ,
துகைமை முற்றிய சாவின் தேவினை,
கடவுளர் யாவரும் கண்கொள வெகுக்கும் ஈடிப
கொடிய பகைவனை, கொல்லநின் தீவளர்
சூளினை ஓச்சுக.
(அரன்மனையிலிருந்து ஈடிபசு வரல்)

ஈடி: வணங்கினீர். நன்று பணியென தேற்று
உம்மிடி களைவதற்கு உவந்த உறுதனை
அமைவொடு எனக்கு நீர் அளிப்பீ ராயின்,
வேண்டிய வாக்குகும், விடுதலை இன்பொடு.
அயலான் ஒருவன் இயம்புதல் போன்றது,
என்மொழி. நடந்ததும், என்செவி வீழ்த்ததும்.
கேட்டவாறு மொழிகுவன்; குறியென் றின்றியென்
வேட்டையில் சிறுபுலன் வாய்ப்பதும் அரிதாம்.
ஆதலின் தீபநாட் டறிவீர் உம்மிடைப்
புதுக்குடி புகுந்த பெற்றியன் முறையில்
இதுவென் உரைப்பன். இலபகசு ஈன்ற
புதல்வன் இலயரை வதைத்தோன் யாவன்
என்பதை அறிவிரேல், என்னிடம் இக்கணம்
யாவும் கூறுவீர். (சிறு ஓய்வு)
எவர் தம் அகத்திலும்
பாவம் படிந்துள தாயின் அன்னவர்
அடிபணிந் திடுதல் அமைவுடைத் தாகும்.
உறுதியர் அதனால் குறையும், நாடகல்வு
அதனின்னும் மிஞ்சா விதியவர் தண்டனை.
பிறதியர் அவரை வருத்தா தாகும்.
(கேட்போர் மௌனம்)
கொன்றவன் புறத்தவன் என்பது தெரிவரின்

கூவீர் உறுதியாய்; கூறுவான் என்மனம்
கனிந்த பரிசோ டின்றிவன் கூடினோர்
நன்றியும் பெறுவான்.
(மீண்டும் அமைதி)

அன்றிப் பயந்தனால்
பிறரையோ உம்மையோ மறைக்க ஈங்கு
மூங்கையாய் நிற்பிரேல், மறைவு விலகவும்
மரணமே கிடைக்கும்; மனதிற் கொள்க.
அன்னவர் யாவரே ஆயினும் என்றன்
ஆள்வுலம், அரசவாம் கேள்மை தஞ்சம்
அளியா தொழிக; அவிப்பலி, வந்தனை,
ஒளிவிழா, யாவிலும் கெழுமையும் ஒழிக.
உரையோன் பீதியன் உறுகோட் கியைய
பெரும்பழி தொடர்க; பதரவன், கொடியோன்!
இல்லெலாம் அவனை விலக்குதல் கொள்க.
இவ்வழி இறைவர்க்கு, அவமே இறுத்தார்க்கு,
கொலைஞரும் அவன் எனைக் கயவரும் தம்வினை
பொருட்டு வாழ்வெலாம் உலனை என்றிப்
பெரும்பழி அழுந்த இறைவனை வழுத்துவன்.
இத்தகைப் பழியினில் என்னையே நீக்கும்
சித்தமும் இல்லேன்; என்னகம், மனைதன்
குற்றம் இழைத்தவற் கடைக்கலம் கொடுப்பின்,
மற்றவர்க் கனித்த மறவுரை யாவுமென்
தலையிலும் வீழ்க. தவறா திப்பினி
தலைமேற் கொண்டு தெய்வம், கடும்பினி
கொண்டுழல் எழ்நாடு, உம்மரசு, இவைக்குப்
பனியென் இப்பணி போற்றுதல் உம்கடன்.
விண்ணிடு கட்டளை வரும்வரை, வாளர்,
தீதறு தவப்பினி தவறிய தறிந்து
வேதனை கொண்டேன், மேதகு மன்னன்
உங்கோன் மறைவில் உண்மையைத் தருவுதல்
என்கடன்; இயல்வரை இதுபணி தெடருவன்.
நன்று. எவ்வாறாயினும் ஆகுக;
இன்று வேந்தர் உய்த்த அரசு
கட்டில் மனையொடு கட்டளை யாவும்
என்னவை யன்றோ! அன்னார், மக்களும் -
என்னையும் அவரையும் இனத்தற் பிணிக்கும்
இன்ப இணைப்பென இறையருள் கூடி
உயர்தலும் சாலும், இத்தகை யயற்கு
நேர்ந்ததே அழிவு. நெஞ்சம் பொறுக்குமோ?
என்னையன் சார்பாய் எவ்வாறு உழைப்பனோ
அன்ன வழியில் அயரா துழைப்பன்.
வலிமிகு அகனரின் கதமசுக்குலமுறை,
பொலிதரசு மைந்தன், இலகபசு தோன்றல்,
இலயசைக் கொன்ற ஈனனைப் பிடித்துக்
கொலைப்பழி தீர்த்தல் குடிமகார் கடனும்.
இப்பணி தவறின் இறைபழி சாரும்.
இப்புவி விளைபயன் இவர்க்குப் பொய்க்கும்
மனைவியர் இவர்க்கு மலடாய்ப் பொய்ப்ப.
இன்புள இவ்விடர் இதனிற் பெரியவை,
தொடர்ந்து சாவரை அடுமே அவரை
இன்றுமென் னனையாய் எஞ்சிய கதமசுக்
குலமகார்! இறையருள் சார்ந்துமைக் குன்ற
நலமே சேரும்.

குழுத்
தலைவர்: நாவிதிற் கூறுதற்
கொன்றிலை மன்னவா! உன்றன் ஆணையால்
மனந்தெளிந் தொன்று மொழிகுவன். குறித்த
மனதின் நானலன். அன்னவன் யாரென
அறியவும் மாட்டேன். குறித்த தேள்வி
எழுப்பிய வீபசே, யாவ ருள்ளும்
பழிசெய் பாதகன் பற்றி அறியும்

* என்கடன் ஆற்றுவன்; எவருமே அறியாக்

ஈடி: ஐன்மை. ஆயினும், உள்ளம் ஒசையா
விண்ணவர் தம்மை வலிந்து யாதும்
மொழிய வைப்பதும் மன்னவர் வலதோ.

குழு: மொழிவும் ஒன்று கேட்பாய்.

ஈடி: மொழிக;
தெளிவுறச் சிந்தித்துத் தெரிப்பவை யாவும்
கொள்வேன் உளத்தே.

குழு: கேட்டுளம் மகிழ்ந்தோம்.
வருவன் கூறும் வண்மையின் சீரியோன்
தைரேசியசு, வீப்சின் செம்மைக்கு அடுத்தவன்.
அருந்தினை எம்பணிக் கன்னவன் புரிவன்.

ஈடி: தெரிந்தே இங்ஙன்வருமாறு, தூது,
கிரயன் அறிவுரை கேட்டு, விடுத்துளேன்.
இருமுறை விடுத்தும் இன்னும் அன்னவன்
இதுவரை வராத அதிசயம் அறிந்திலேன்.

குழு: பலபல வதந்திகள் புரந்த வண்மையே;
பசைய நீலியர் விழல்கதை அவைதாம்.

ஈடி: வதந்திகள். எத்தகை வதந்திகள், விளம்புக.

குழு: வீதியில் செல்கையில் யாதிகர் கொன்றனர்;

ஈடி: என்றோர் ஊர்மொழி யாவும் கேட்டுளேன்.
எனினும் சான்றுகள் எங்கும் காண்டிலேன்.

குழு: தனக்குநேர் கட்டுரை தெளிவுற அறிந்தும்
மனங்கொளா, நடுக்குறா மனிதனும் உண்டோ!

ஈடி: செய்கைக் கஞ்சான் சொல்லிற்கு அஞ்சுமோ !

குழு: அவனை அறியும் அறிவன் உளனே
எவரினும் ஏற்றம் வாய்த்தநல் வாய்மையோன்
அவனை மக்கள் அழைத்திங் கடைவர்.
(ருருவுடன் தைரேசியசைப் பணியாள் அழைத்துவரல்)

ஈடி: நின்புலன் தப்பியது ஒன்றுமில்லை
என்பதை அறிவோம். என்றும் உன்னகம்
திருவொரு, பாற்சேர் பெருங்கனை, விண்மன்
பொருந்திய அறிவு, பொலிந்தது அறிவோம்.
கன்னினை தவறினும் கருத்துளம் காணுமே
எந்நகர் நிலைமை; எம்மவர் காப்பெனத்
தனையென உம்மையே கொண்டனம்; வீபசு
தமக்கு நேரே எம்மொழி அபபீபி
மசமொழி பெற்றனோம்; மற்றையோர் உமக்கிதை
உளர்த்தி இருப்பர் உளத்தும் கொள்ளையில்
உய்ய ஒருவழி இலயசை வதைத்த
கயவனைக் கொல்லல்; இயலா தென்னில்
நாடு கடத்தல். நற்புட் குறியே,
கூடு வேறு குறிபல தம்முள்
வருவது உரைக்கும் வலமெதை, அதனைத்
திறம்பட ஆள்க. உறுபலன் உமக்கும்
எனக்கும் தீபசு தனக்குமாம். எல்லேம்
உமக்கே தஞ்சம். நேர்ந்த சாவினால்
கறைகொள் அனைத்தையும் காப்பது உம்கடன்.
இறைஞ்சினோம் உம்மையே இறையென; ஒல்லும்
திறனால் மன்பதை புரத்தலே மனிதனின்
ஆன்றநற் பணியாம்,

தைரேசியசு: அறிவுடை மொழிகளே.
ஆன்ற அறிவினால் ஆம்பயன் ஒல்லெனின்,
அறிவுடை மக்கள் ஈருந்துயர்ப் படுவரே.
நெறியிதை மறந்தேன். நன்றிதை யாரே
அறிந்தார்! இவன்நான் அணைந்தது பெரும்பிழை.

ஈடி: உறுதனை உம்மிடம் சிறிதும் நாம் பெற்றிலம்.

தைரே: என்னகம் சென்றிடின் இருவர் சமையும்
இனிதே தவிர்ந்திடும். நன்மையும் கூடும்.

ஈடி: தீபகின் மகன்நீர்; தனைசெயத் தவறுதல்
ஆபத்தாம். பகைமையால் ஆம்பயன் யாதே?

தைரே: தங்கள் மொழிகள் தீங்கு விளைப்பது
கண்டு, காக்க நா கொண்டனன் உள்ளம்.

ஈடி: அறிந்த தனைதேல் மறக்கா துரைக்க.
வேண்டினோம், தேமேல் ஆனை; உரைப்பீர்.

தைரே: மாயிமள் மறைத்ததும் மதியை. என் ஆம்மறை
வாய்விட் டுறையேன். உம்மறை வாய்விடேன்.

ஈடி: அறிந்தது நவிலாது மறைத்து, நம்மைப்
பிழைத்து, நகரையுழ் விழுத்த என்னினை!

தைரே: உன்னையும் என்னையும் உய்ப்பதென் நோக்கம்.
வினவற்க ஒன்றையும். வினைபயன் ஒன்றிலை.
விளம்பேன் ஒன்றும்.

ஈடி: விளம்ப மாட்டாய்!
கயமைதோய் போக்கிரி (கல்லையும் கனக்கச்
செய்வோம்! ஒரு மொழி செப்புதற் கிலையே?
இறுதி வரைக்கும் இயம்பா திருக்க
உறுதி கொண்டனை!

தைரே: உரையேல் அம்மொழி.
உன்னகம் சீர்பெற உரியன புரிவாய்.

ஈடி: என்ன இழிமொழி! அரசிற் கிவ்வனை.
சால்பையும் கனக்கச் சூழும் புன்மொழி.

தைரே: நேருவ நேரும்; நெஞ்சு திற்ந்துநான்
கூறாதிருப்பினும்.

ஈடி: நேருவ தெதுவோ,
ஓர்ந்ததைக் கூறுதல் உன்கடன்.

தைரே: வஞ்சினம்
கொண்டுநீ சீறினும் கூறிடேன் ஒன்றும்நான்.

ஈடி: சீறுவன் உண்மை; சிறியும் மறையாது
கூறுவன் மனத்துளது. செய்கையில் பங்கிலை
எனினும், சூழ்ந்த வினையினை முடித்ததில்,
உன்பனி பெரிதே. உன்னிரு விழிகளும்
இன்னும் காணும் தன்மை யுடையன.
எனிநின் கைகளே அன்றிப் பிறிவ்
வினைதனை முடித்திரா என்பநான் அறைகுவன்.

தைரே: நல்லது; கேளினி! நின்நாப் பொழிந்த
எல்லாச் சாபமும் ஏழுமுன் தலையினில்
என்பதை ஓர்வாய். இன்னும் என்றுடன்
அன்றியும் இங்குளார் அனைவர் உடலும்
இனிமேல் எதுமொழி தன்னும் புகலேல்.
என்னை! தவஞ்சேர் இந்நாடு அழிந்து
பொன்றக் காரணம் புன்மைகூர் நீயே!

ஈடி: நானமற்று வீன்மொழி நவின்றனை.
சாரும் பலனில் தப்புதல் சாலுமோ?

தைரே: சாலும்; என்வாய்மையே சால்புடைக் காப்பு.

ஈடி: யார்வினை இது சொல்; இதுவோ குறியுரை.

தைரே: ஆர்விலா திவ்வுரைக் காரணம் நீயே.

ஈடி: மீளவும் மொழிக, பிழையதில் தவிர்க்க.

தைரே: தெளிவிலை என்மொழி! தொடர்ந்தெனைத் தாண்டவோ.

ஈடி: புரைதீர் உன்மையே பொருளும் வேண்டுவன்.

தைரே: உரைப்பன் உண்மையை; உன்றுநீ தேடும்
கொலைஞன் நீயே. இலையிதில் ஐயம்.

ஈடி: இருமுறை தீச்சொல் இயம்பிநீ தப்பவே!

தைரே: நிகழ்வினை கொழுந்துற இன்னும் கூறவே!

ஈடி: நன்றுநின் புன்மதி நவிற்க யாவும்.

தைரே: அறியா மடமையில் அன்புடை யாரோடு
அறங்கொல் இன்பத் தமர்ந்து நீ வாழ்வதை
அறிவையோ? அறிவன்நான்.

ஈடி: அறிவிலா வசைபல
இயம்பியும் தப்பலாம் என்பதுள் என்னமோ?

தைரே: உய்யலாம். உன்மையின் உயரரண் உள்ளதோ?

ஈடி: உன்மைதான் எனினும், உனக்கது இல்லை.
கண்ணிலி, நான், மதி, கருத்திலி, புன்பதர்.

தைரே: உன்பால் இரங்கினன்; புன்மொழி பகர்ந்தாய்;
உன்பால் ஒரு நாள் உலகினை மொழியும்.

ஈடி: அழியர்ப் பேரிருள் தழீஇய கேடநீ.
உன்னால் ஒளிவாழ் என்னைப் பிறரை
உறுத்தல் சாலுமோ?

தைரே: உன்னை வீழ்த்தும்
அறமென தன்றுகாள்; அப்பலோ பணியது;
தவறா தவன்நிறை வேற்றுவன்; அறிவாய்.

ஈடி: (கிரயனின் தூதனை ஒச்செய்தியோடு இணைத்து)
உன்றன் சூழ்வோ அன்றில் கிரயனின் சூதா?

தைரே: கிரயன் ஏதும் அறியான்,
உன்பதை நீயே.

ஈடி: (தன் சிந்தை சென்றவாறு)
நன்மன் சொற்கள்.

ஈடி: வாழ்வெனும் இகலில் அரசிறை, செல்வம்
மதியோடு மதி, என்றும் நிதம்பகை பொறாமை
பொடுபொரல் வேண்டுமோ? நெடுநாள் தன்பன்.
அரும்பெறல் அன்பன், கிரயன், கரந்தனை,
வீழ்த்தியான் வேண்டாது இந்நகர் அளிபதம்
அழிக்க முனையவோ? பழுதார் மாந்திர
வித்தை பகர்ந்திடு பித்தன், பயன்பெறின்
நயம்பெற விழிப்பன்; நயக்குறி உரைப்பதில்
நயனம் அற்றவன். (தைரேயியை நோக்கி)
நல்லது உன்குறி.

சொற்கலை நல்கிய அற்புதம் யாதோ?
அந்நாய் முகப்பேய் இவணுறை போழ்துநீ
என்ன செய்தனை? எம்மவர் உய்யவோர்
நன்மொழி அற்றதோ உன்வயம்; பெருமதி
அளப்பரும் மறையொன்று உளதிவன், ஓர்ந்ததன்
விளைவினை விளம்பலோர் அறிவன் பணி; எனின்
மறைநீர் பணிநீ புரிந்திலை; தேமொழி
புட்கலை வாளா கிடந்தன; இதுதியில்
அடியேன் மடஞ்சேர் ஈடபசு வந்திவன்
புட்கலை விட்டு, இயல் புத்தி யோடு உண்மை
அறிந்து, வஞ்சகன் வாயை அடக்கினன்.
கிரயன் பின் அரசு கிட்டும் என்றவோர்
கருத்தொடு அன்னவற் கழிவு சூழ்ந்தனை.
ஏதிலான் மேற்பழி ஏற்றும் உம்மவர்
சூதிற்கு உழுவலீர். தோன்று மாறு;
வயதிலை; ஆயின்உன், கயமை உணர்வகை
தண்டம் வாய்த்திடுக்.

குழு: தங்கள் சினத்தினால்
பன்பிலா மொழிபல பகர்ந்துளீர்; இறைவன்
ஆணையை யாவரும் பேண முயல்கையில்,
நன்றல இம்மொழி.

தைரே: மன்னன்நீ ஆயினும்
மறுமொழி கூறும் பேறெனக் குண்டுகான்.
இந்நிலை எம்மை இனைநிகர் ஆக்கிடும்.
உனக்கன் றென்பணி. உலொட்டிய சிற்கை.
கிரயக் கும்பணி புரிகடன் எனக்கிலை.
குருடென இகழ்ந்தனை, பெருமகிழ் வுற்றனை.
கண்ணுளாய் எனினும் கண்டிலை சூழ்ந்தனை
நண்ணும் பாழினை; கண்ணுளாய் எனினும்
குழ்ந்த தோழமை தேர்ந்திலை, அறிந்திலை.
யாச்மகன் நீயென ஓர்ந்தியோ? மன்னுளார்
மறைந்தவர் யார்க்கும் புரிந்தனை பாபம்.
எனினும் உளர்ந்ததிலை நின்பிழை; உன்றன்
அன்னையும் அப்பனும் அளித்தநற் சாபம்.
இருமருங் கிலங்கூர் பொருந்திய வாளென
மன்னி லிருந்துனை மறைத்திடும். இன்று
தெளிந்த கண்ணொளி அழிந்திருள் சூழ்விடும்.
உன்பேர் ஆர்வின் தனிப்பெரும் துறக்கம்,
என்றனை எழில்பெற மனையகம் படுத்திய
இன்ப மனைசை தன்னின் உண்மையை,
உன்னரும் பெருவசை தன்றுடன் உணர்கையில்
உன்னீ நீ அறிவாய் உன்னை, எந்தை
என்பார் யாரென ஓர்வாய்; அன்றுநீ
சல மிட்டழும் ஓசையை ஞாலம்
முழுவதும் கேட்கும்; எழுமே சிதரனின்
திசையெலாம் எதிரொலி. சிந்தைகொள் வாறு
வசையினை என்மேல் வாரிநீ வீசுக.
கிரயனைக் கனன்று பெரும்பழி சுமத்துக.
என்நா அசையிலோ என்றும் மாறிடம்
கானாக் கீழ்மைசேர் வசையுடன் வீழ்வாய்

ஈடி: இன்னும் இம்மொழி என்செவி வழவோ?,
என்முன் தவிர்க! எங்கிருந்து விந்தையோ
அங்கு செல்க; அகல்க இக்கணம்.

தைரே: எங்கெனைக் கொணர்ந்தது உனிச்சையே எனதன்று,
எழுவன் இக்கணம்.

ஈடி: எத்தகைப் பிதற்றலை
ஏற்க வேண்டும் என்பதை அறிந்தால்
பொல்லாப் இவ்விடர் எல்லாம் நான்தவிர்த்திருப்பேன்

தைரே: பிதற்றலாய் இருக்கு மென் மொழியுனக்கு.
உன்றன் பெற்றோர் அவ்வுரை ஏற்கார்.

ஈடி: என்ன கூறினை! என்தாய் தந்தையர்
என்னைப் பயந்தவர் எவரோ?

தைரே: இன்றுதான்,
உனது பிறந்தநாள்; இன்றே உன்சா
நாகுமாம்

ஈடி: இன்னும் நவில்வதை நொடியாய்க்
கூறல் வேண்டுமோ ஐயனே!

தைரே: நொடி தீர்
ஆற்றலில் உலகெலாம் போற்றும் பெரியோன்
அல்லனோ நீ.

ஈடி: என் வல்லன்மை வாய்த்தநற்
கொடை. அதைக் குறித்தா நீ கேலி செய்வதா?

தைரே: கொடையா? உன்குலக்கேடும் அழிவும் அல்லவா!

ஈடி: கவ்வை இல்லையே. மீளாப்
பாழுற்ற நாடிதைப் பாது காத்துளேன்.
ஆழ்ந்தவோர் இன்பம் ஆகங் கொண்டுளேன்.

தைரே: ஏதுவம் இல்லம் கைகொடு சிறுவ.

ஈடி: மற்றை நம் தனை ஏற்றுக் கெமக்கினி?
சிறுவன் தனையோடு சேர்க நம்மில்லம்.

தைரே: உன்னால் எனக்குறும் இன்னலை நோக்கி
நெஞ்சம், குலையாது நேர்முகம் நோக்கி
கூறவேண்டிய கூறிய பின்னர்!
யார்பொருட்டு ஆரவாரம் செய்தனை,
அன்னவன், இலயசைக் கொன்றவன், இங்குளான்.
அல்லியன் போலிங்கு அவன் குடி கொண்டுளான்.
எனினும் தீபசில் தோன்றினோன் என்பதை
உலகம் விரைவில் உணரும். அவனின்
வலியும் அழியும்; கண்ணோடு இந்நாடு
புகுந்தவன், கண்ணிலந்த அயற்புலம் ஏகுவன்.
மிகுதனம் இன்றவன் வசிப்பினும், ஆகுவன்
நாளைபோர் ஆண்டியாய். நீள்தடிக் கையோடு
நெறியெலாம் தழாவிப் புறப்புலம் பெயர்வன்.
சிந்தை குடிகொள்தன் செல்வப் புதல்வனின்
தந்தையும் உடன்பிற் பாளை மாயவன்,
தன்னைப் பெற்றவள் தலைவ மானவன்,
தந்தையைக் கொன்று அவன், தானம் கொண்டவன்,
என்பதை, உலகம் இனிநன் குணரும்.
சிந்தைகொண் டிப்பொருள் ஓய்க; செல்க;
அந்தகன் என்க என் ஆன்றசொல் பொய்யெனின்,
(யாவரும் செல்லல்)

குழு: தெல்பி மலையுறை தெய்வக் கனைகுரல்
வல்லை கடியுதே, செந்நீர் சொரிந்திட்ட
கள்ளக் கொடுவினை யாளனை!
யாரவன்?
பரிவேகம் கொண்டு பவனத்தைச் சாடிப்
பறந்தாலும் சூழ சேய்எரிமின் மூண்டு
விரைந்தோடி வந்து மடித்திடும்
பொய்யாக் கதியோடு பாயும் விதியும்.
பாணசின் மேலொங்கு பனிஒளிர் குன்றகம்
சேணின் றொலித்தது, செய்வினை சூழ்ந்தானைக்
காரிருள் கீழ்ந்து கொணர்கென.
யாண்டவன் உள்ளான்?
காட்டியல் காளை குகையிலோ காவிலோ
கட்டின்றிக் குன்றில் குலாவும் எனினும்,
கேடிலாக் கூவல் அவன் காதில்
நீடொலிக்கும்.
ஆழ்புவி நெஞ்சொலி ஓர்க்கு மவற்கெதிர்.

அறிவன் கொடிய உரைத்தனன், உண்மை.
அறிந்திலம் வாய்மை; மறுக்கவும் மாட்டோம்.
எல்லாம் இருள்மயம்; எம்முள் உறுவதைப்
யுலங்காரோம், ஆயின் பயமே கொள்வோம்
இலபகசு மனைக்கும் பொலிபசு மனைக்கும்
இகலெது வேறும் இருந்த துண்டோ?
புலன்படா மரணம் பொருட்டாய் ஈடிபசு
புகழ்க்கொரு வசைமொழி பொழிதலும், இலபகசு
அகமனை மேற்சினம் கொளலும், அழகல.

அவனியின் மறையெலாம் அவ்வலோ குசு
தவறாதறியும்; புவிவளர் அறிவருள்
ஒருவரில் அடுத்தவர் அறிவர் எனுமொழி
பொருந்துமோ? எவர்க்கும் புகழ், மதி படிப்படி
அமைந்தவை. நிறுவுமுன் அவப்பழி சுமத்திலேன்.
சிறையுடை மதனிகைச் செருகினை அழித்து
நிறைபுகழ் அணிந்தவன், அரும்பெறல் மகனெனைக்
கருதிலேல் தவிர்ந்து பிறவழி கருதிலேன்..
(கிரயன் வருதல்).

கிரி: பெருங்குடி மக்காள்! அரசன் ஈடிபசு
என்மீது அவப்பழி ஏற்றினான் என்றோர்
புன்மொழி கேட்டனன்; பொறுக்கிலன் அம்மொழி.
போரிடர் சூழ்ந்தவிந் நேரம், மெய் மொழி,
எவ்வகை யாலும் சதிசெய் தனனெனும்
வசை மொழி கேட்கும் வாழ்வினை வேண்டேன்.
வாழ்விதோ நீடது; வசையின் நிலைப்பதால்,
பாழ்த்தது; ஊழ்த்தது பாதகன் என்றெனை
நாட்டவர் நட்டவர் சாட்டுரை பகர்வதால்.

குழு: வாய்பொழிந் திட்ட வார்த்தைகள் கோபம்
பாய்ச்சிய புறமுரைப் பன்பின.

கிர: அறிவன்
என்னுரை ஏற்று இயம்பினன் பொய், என
அன்னவன் கூறினன் அல்லனோ?

குழு: கூறினன்;
என்ன நோக்கொடு இயம்பினன் அறியோம்

கிர: எனக்கெதிர் இயம்பிய ஏதச் சாட்டு
உளத்தீர் புடன் ஓரே ஓர்புடன் அரசர்
கிளந்தது தாமோ?

குழு: அளந்தென் தலைவர்;
ஆள்வினை ஆய்பவன் அல்லன்நான்; அதோ அவர்.
(ஈடிபசு)

ஈடி: வாழ்கநீர் ஐய! வரவிவண் அளித்த
காரணம் யாதோ? என்குடி கவர்ந்தென்
ஆருயிர் போக்க, ஆய்ந்து சூழ்ந்தும்
என்முகம் கொண்டுநீ என்மனை நண்ணினை?
புன்மதி, பேடி எற்றனை எண்ணியோ!
சூழ்ச்சி கோலலைத் துலக்க, கண்கள்
வீழ்த்த, கடிமதி வேண்டும் அரசர்க்கு
என்பதன் எண்ணமோ? என்ன சூழ்ச்சி!
புன்மைப் படைப்பு; பொருளும் நண்பரும்
இன்றிநீ இறைபதம் இசைத்துழலல்.
மன்பதம் கொள்பவை மன்பதை, பொருளே.

கிர: என்மொழி கேட்டபின் உன்முடிபு கொள்க.

ஈடி: உன்நா வலமெனக்கு உறுத்தா தறிவு
என்பகை தம்முள் வன்பகை நீயென
நன்று நான் அறிவன்.

கிர: ஒன்று மொழிகுவன்;

ஈடி: இயம்புக எதையும் மெய்யன் நீயெனும்
ஒரு மொழி தவிர்த்தே.

கிர: ஒரு தலைக் கோளா ல்
நயமுனக் கேதும் எய்தும் என்றுநீ
கொள்ளல் ஆகுமோ

ஈடி: குலத்திலக் கெதிராய்க்
கள்ளச் சூழ்ச்சிகள் கனித்து நடாத்தியும்
தண்டனை தவிர்த்தும் தப்பலாம் எனமனங்
கொண்டனை

கிர: அவ்விதம் கொள்ள நானோர்
பித்தனோ; நிற்க. பிழைநான் என்ன
செய்தனன் என்றுநீ சிந்தை கொண்டனை?

ஈடி: சூதக அறிவினைச் சூழ்ந்து நான் அழைத்திட
ஏவலாய் நின்றவன் இங்கெவன்?

கிர: அதுநான்;
இயலும் எனில் நான் இன்னும் அதையே
செய்குவன்.

ஈடி: உண்மையைச் செப்புக எவ்வாண்டு
இலயசு,

கிர: இலயசா! ஒன்றும் விளங்கிலேன்

ஈடி: இலயசு மறைந்தின்று எத்தனை காலம்?

கிர: பல்லாண்டு ஓடின. சொல்லில் அடங்கா.

ஈடி: அன்றுமிக் கிழவன் தன்தொழில் பயின்றனன்!

கிர: இப்புகழ் அன்றும் இருந்தது அறிவற்கு.

ஈடி: அற்றை நாட்களில் அறிவன் என்னைப்
பற்றி ஏதும் யறைந்தது முண்டோ?

கிர: என் செவி விழுமாறு ஒன்றும் இல்லை

ஈடி: இறப்பிற பற்றி ஏதும் உசாவி
அறிந்த னண்டோ?

கிர: அறிந்த தொன்றிலை
உசாவொன்று நடந்தது உண்மையே ஆயினும்.

ஈடி: பன்டிவ் வறிவன் பூண்டதென் மௌனம்?

கிர: அளவிற்கு மிஞ்சிப் பிறசொல விரும்பிலேன்

ஈடி: அறிந்ததாய் யாதோ; உரைத்திடல் இங்கதை
அறிவுடைச் செயலாம்.

கிர: அறிந்ததை உரைப்பன்
மறையான; ஆயின் அறிந்தது யாதோ?

ஈடி: அறிந்தது இதுவே; அறிவன் என்பான்
இலயசைக் கொன்றவன் எனும்பிழைச் சொல்லென்
தலைமீது சுமத்தத் துணிவனோ சூழ்ந்த
உன்னாக் கின்றேல்?

கிர: உண்மையும் பொய்யும்
உன்னளம் அறியும் ஒன்றுநான் கூறுவன்.

எனைநீ வினவினாய்; ஏற்ற முறையில்
உன்னை வினவ அனுமதி அளிப்பாய்.

ஈடி: நன்றே வினவுக. குருதிக் கறையினன்
என்றென் மேற்குறை ஏற்றுதல் எளிதன்று.

கிர: என்னுடன் பிறந்தாள் தலைவன் தாங்களோ?

ஈடி: இனியநற் பேறஃ தெனதே.

கிர: அன்னவள் உடைமை அரசிறை இரண்டிலும்
மன்னர்க் கொத்த மதிப்பிற்குரியவள்.

ஈடி: விரும்புவ யாவும் உரிமையில் அவட்கே.

கிர: அடுத்து எனக்கு ஒத்த அமைவுயர்வு உண்டோ?

ஈடி: அதிலென் ஐயம்? அதனால் உன்றன்
கயமை இன்னும் உயர்ந்து தோன்றுமே.

கிர: நின்னுரை முழுப்பொய்; நிதானித் துன்னுள்
என்போல் சிந்தைகொள். இறைநிலை வாய்த்தவன்
ஒருவன், அரியணை நலமெனக் கொண்டுதன்
அலைவில் வாழ்வினைத் தொலைக்க முனைவனோ?
ஆளா அரசனாய் வாளா இருப்பதென்
கோளன்று; அரச வாழ்விதே போதும்.
அடக்க முடையார் மடிவரோ நசையால்;
என்முறை கேட்டு நிறைசெய நீயுளாய்;
இன்னும் உன்பதம் ஏற்றிடில், பின்மனம்
இரங்குவ பற்பல புரிதல் வேண்டும் நான்.
இரங்குவ தில்லா இறைமுறை, மனநிறைவு,
இவற்றினும், இறைபதம் எவ்வழி என்மனம்
கவர்ந்திடும்? என்னியல்பு உவ்வா மிகைபுகழ்
நாடிடும் மூடன் நானலன் காண்பாய்.
யாவரும் கேளிர் யாவரு மென்னவர்;
உன்னை நன்னால் உவந்தவை வெறலாம்
என்பதை அறிந்தும், உன்னை நாடுவோர்
என்னையும் நாடுதல் எதனால்? இத்தகை
வாழ்வினை விடுத்து, வேறுநான் விழைவனோ?
மோழை ஒருவனே முயல்வன்; துரோகம்
மன்பழி; அஃதென் மனங்கொள் பூட்கையு
மன்றுகான். என்னறி வெட்டிய வரையில்
என்றன் நண்பர் இதயப் பூட்கையு
மன்று; மற்று என்னை ஆய்வதன் நோக்குமோ
நன்று; நேரே நண்ணுக பிதியர்
திருமனை; நாக்கொனர் செப்தியில் உண்மையைத்
தெரிக; அடுத்து, வருவது உரைப்பான்
கூட்டின் குற்றம் நாட்டுக; பின்னர்
நேரே கொலைமுறை நேர்க என்மீது;
என்னுளம் உன்முறை ஏற்கும் ஒன்றாய்
எனினும் இன்னிலா ஐயம் தன்னால்
மறைவாய்க் குற்றம் ஏற்றலை எதிர்ப்பேன்.
நல்லோர் புகழிசை நலித்திட உண்மை
இல்லாத வசைமொழி இயம்டல் பெரும்பழி
பொல்லா மக்களை நல்லரர் என்று
கொளலும் இன்னும் குற்றம் உழவல்
அன்பனை ஒதுக்குவன் தன்னுயிர் அருநிதி
ஒதுக்குவான் அல்லனோ? காலமே உணர்ந்திடும்
உண்மையை என்னை! உண்மை மனிதனை
உணர்தலும் காலம் ஒன்றினால் ஆகும்.
உலகும் பாவியை ஒருநாள் அறியும்.

குழு: நல்ல அறிவுரை; நன்மதி கொண்டவர்
உள்ளம் பொருந்தி ஒழுகற்கு உவந்தது.
முன்மதி என்றும் பின்விடர் ஈவது.

ஈடி: விரைந்தியல் சூழ்வினை விரைந்தெதிர் கொள்ளல்
புரைதீர் உபாயமாம். புரிபவன் முயல,
ஒருசெயல் இன்றி ஜமையைப் போல் நான்
வாளா இருக்கவோ?

கிர: வேண்டிய தென்ன?
நாட்டி லிருந்தெனை நாதியற்ற அனுப்பவோ?

ஈடி: நாடு கூத்தல் நன்மை செய்வதாம்;
எமன்வழி சேர்தலே ஏற்ற தண்டவை.

கிர: எவ்வழி உனக்குநான் ஏதம் புரிந்தனேன்
என்பது அறிந்திடின் !

ஈடி: இன்னும் நீ விட்டிலை
பழையவுன் வாதம்.

கிர: பிழைவழி செல்லுமுன்
இயல்பினை அறிந்ததால்.

ஈடி: என்செயல் செவ்விது
என்பதை அறிவன்நான்;

கிர: இயலுமுன் கண்களில்;
என்கண் ஏற்கா.

ஈடி: ஈடிலாக் கயவன்நீ !

கிர: உன்மொழி பொய்த்திடின்;

ஈடி: மன்கூடன் ஆள்தலே.

கிர: நெறிபிறழ் முறையை நிறுவியோ ஆள்வது?

ஈடி: அறிக இவ்மொழி அரியஎன் நகரே !

கிர: அன்பின் தீபசே! அவள்பால் உரிமை
உனக்கே உரியதா? எனக்குமாங் கனையனே.

குழு: போதுமே உங்களின் மோதுகை, யோகதா,
ஏதமில் எங்கள் இராணி இவண்வந்து
அண்ணந்தனன்; உங்கள் பிணக்கினை நக்கத்
துணைநன் களிப்பன் உணர்வீர் நன்கு.
(யோகதா வரல்)

யோக: போரியல் பண்பீர்! பேரொலிப் பிணக்கிதன்
பொருள்தான் என்னவோ? அடுந்தியர் ஒழியாது
உம்பகை பொருதும் ஓம்புதல் உம்நிலைக்கு
அமையுமோ? அற்ப கசப்பினைப் பெரிதாய்த்
தருக்குதல் தகுமோ? தலைவ! மனையுள்
வருக; கிரயன் விரைக உன்னகம்.

கிர: தங்காய் உம்மொழி தகாது. காரணம்
தக்கது இன்றியுன் தலைவன் ஈடிபசு,
மிகுக்கொடும் தண்டனை விதித்தவன்; நாடுவிட்டு
அகலல் இறத்தல் ஆகிய இவற்றுள்
ஒன்றே தண்டனை.

ஈடி: உன்மை அம்மொழி.
என்றன் உயிரிற் கிடையுறு ஆம்விதம்
வஞ்சகச் சூழ்ச்சி வகுத்தனன் இவன்தான்

கிர: வன்செயல் அவ்விதம் வகுத்தனன் ஆயின்
வெஞ்சினம் கொன்டெனை வின்னகம் வாட்டுக.

யோக: இறையுள் பற்றுடை யாயெனில் ஆணையின்
உறுதியை, ஈடிபசு நம்புதல் நற்செயல்
என்பொருட் டிங்குளார் பொருட்டும் நம்புக.

குழ: இனைகுல மன்னா இணங்குக;
கன்னோக்கு மன்பர் கடனெனக்
கொள்ளும், புரை ஊர்வாய்

ஈடி: நான்மனங் கவலவோர் நியாய மில்லையே.

குழ: முன்னொரு பொழுதும் முறைசாய்த் தறியா
அன்னவன் இனை அவன்கைப் பரிசை.

ஈடி: இதப்பது எதற்கென அறிவிதோ நீவிர்?

குழ: அறிவோம் ஐய.

ஈடி: அறைகுவம் செய்தி

குழ: அமிராக் கெழுமையின் ஆணை மொழிந்தனம்;
சீரிய கேள்முறை யின்றியோர்
ஆயிர் நன்பனைத் கோள்மொழி
கேட்டுயிர் வீட்டுதல் நேர்மையோ?

ஈடி: என்றன் இறப்பினை, இன்றேல் நாடு
கடத்தலை இம்மொழி சுட்டுவ தாகும்.

குழ: கிழமையிற் பழுத்த
குழவாம் சிந்தையிற் குடிகளின்
வீழ்க நம்முயிர், மாள்க நம்பலம்;
வியனுலை இறையருள் விழுமிய
ஒன்கதிர்க் செல்வன் காய்க நம்மாயுள்.
ஆயிட்,
நாட்டவர் தலிந்தி சேருறும் நேரம்
அடிமைப் பொறியார் ஒருவரோ டொருவர்
பொருது, மன்பதைத் துன்பினைப் பெய்க்கலைக்
கும்மெனத்தக அயரும்; என்னளம் பொன்றும்

ஈடி: எனை அவன் செல்க. இழிமையோ டியைந்த
இறப்பு, நாடகல் வெதான் என்றுக்
குறியும் உறுக; உம்மொழி அன்றி
அவன்மொழி யன்றென் அடக்கம் கொண்டது
அவனை என்றுமென் அகம்சினந்து ஒதுகும்.

சிர: வெஞ்சினக் கொடுமைபோல், வலிந்த கருணையும்
நெஞ்சிடம் கொள்ளின் நமனைக் கொல்லுமே.

ஈடி: இவ்விடம் விட்டு நீ ஏகுக;

சிர: ஏகுவ.
நீதியிற்றி நீ இவ்வகலைக் கனன்று
வலி கடந்தவை யாதலின் ஏகுவன்.
(போகிறான்)

குழ: அம்மையே வேண்டுக; அரசரை வேண்டுக;
அமைதி பேணு மாறு வேண்டுக;
வேற்றிடம் செல்லு மாறு வேண்டுக.

யோக: இடரில் எவ்வாறு எழுந்தது?

குழ: கொடிய கதிபனை பயந்தது.
ஆதர வற்ற பழிச்சொலும்
வேதனைப் புண்ணைக் காய்ந்தது.

யோக: ஒருவரில் ஒருவர்
பகைவரை பொழிந்தனர்.

குழ: அதுதான் உண்மை.

யோக: இது எவ் வகைத்தது?

குழு: மீள வினவல் பாழ்வினை யாகும்.
தன்புகும் நாட்டு மனத்தியர் போதுமே.
மற்றிதை மறப்பதால் உறுமே பெருநலம்.

ஈடி: உயர்பெரும் சால்பீர்! உங்கள் இணக்கமோ
நயமிகு தகையதே.

குழு: நாமிவண் மொழிவதைக்
கேட்க, வேந்தே ! பீடை பிணித்த
நாட்களில் எங்கள் நாட்டினைத் தன்பின்
மீட்ட பெருந்தகை மதிசேர் மன்னனின்
சேமப் படையைச் சினக்கும் கயமையை
நாம்மனங் கொள்வமோ?
அடுக்கும் புயலொழித் தமைதி சேர்க்கும்
திடந்தோள் வரனைச் சினக்கும் சிறியதோ!

யோக: எனக்கும் சொல்லல் இயலாத மறைபொருள்
என்னதன் உண்டோ? என்னைய! வேண்டினேன்;
என்ன காரணம் இக்கொடும் வெஞ்சினம்
அன்னவன்பால் நீர் அகத்துக் கொண்டது?

ஈடி: எனக்குநீ நல்லோர் இவரினும் மிக்க
இனியவள்; ஆயினென்? பிழைத்தவன் சிரடனே.
எனக்கெதிர் சூழ்ந்ததும் இவ்வன் அறிவாய்.

யோக: என்ன குற்றம்? எங்ஙனம் சூழ்ந்தனன்?

ஈடி: இலயசைக் கொன்றது என்செயல் என்பது
கிரயன் கூற்று.

யோக: கிரயன் தானே
அறிந்து மொழிந்ததா? பிறர்வயின் ஊர்ந்ததோ?

ஈடி: அவனே அவன்திறன்; பதர்மொழிக் குறிசொல்
ஒருவனைக் கருவியாய்க் கரந்துளான் தன்வினை.

யோக: எனின், பழி அஃதை மனங்கொள்ல் வேண்டாம்.
உறவு உரைக்கும் மறைமொழித் திறமை
பெற்றவர் ஒருவரை அறிந்திலேன் இதுவரை;
என்னுரை இதனை இனிதே நிறுவுவன்.
இலயசும்நானும் ஈன்ற மகவினால்
இலயசு மரணம் எய்துவன் என்ற
வீபசும் அவன்றன் பெருமைசேர் அமைச்சரும்
இயம்பினர்; நேர்ந்த தியாது. முத்தெரு
மயங்கும் தலத்தில் மறங்கூர் கள்வர்
இலயசைக் கொன்றதை உலகமே அறியும்;
குழந்தையோ மூன்றுநாள் கழியுமுன் மன்னராற்
கழற்கால் குறைந்தபின் காலன் வயப்பட
கான்மலைச் சாரலில் கைவிடப் பட்டது.
ஏனிதை அப்பனிலா ஏலவே அறிந்திலன்.
மகவு தந்தையை மாய்த்ததா? தந்தையோ,
மகனால் அன்றி மற்றவர் தம்மால் [illegible]
மான்டனன்; இதுவே மறைமொழி புகல்வார்
மான்பாம்; இன்னும் பேனவா அவருரை?
இறைவன் திருவுளம் எது? அது உவந்த
முறைமையில் நினைவுறும்; எமக்கு தின்னம்

ஈடி: அன்புடையாளே! நின் மொழி கேட்டபின்
என்னகம் வேகுதே. என்றோ நடந்தவை
கண்ணென் உளத்திலும் ஏக்கம் புகுந்தது.
இனந்தெரி யாதவோர் இன்னலும் உதித்தது.

யோக: என்ன நேர்ந்தது? ஏனோ இத்தனை
துணுக்கும் திகிலும்?

ஈடி: தெருக்கள் மூன்று ஒன்று
இணங்குமோர் புலத்தில் இலயசை யாரோ
கொன்றனன் என்றுநீ கூறினை அல்லவா?

யோக: அன்று கேட்ட அச்சுதை துவறாது,
இன்றும் உண்மையின் நிலை வ தறிக.

ஈடி: எங்குஞ்ந் நாட்டில் இச்செயல் நடந்தது?

யோக: போசிசு என்ற புலத்தில், தெருவர்
வீசி, தெல்பி தெளிவையக் கூடிடும்
இடத்தினில்.

ஈடி : என்று நடந்தது இச்செயல்?

யோக: மன்பதம் இங்குநீர் வசிக்கச் சில்லாள்
முன்னரே இந்நகர் வந்தது இம்மொழி.

ஈடி: இறைவர்! எனக்குநீ இறப்பது என்னவோ?

யோக: மன்னவா! தங்கள் இதயம் தாங்கா
இன்னல் யாதோ?

ஈடி: வினவுதல் வேண்டாம்.
இலயசின் உருவம் எவ்வாறு இருக்கும்?
இறக்கும் போதவற்கு எத்தனை அகவை?

யோக: உருவில் ஒப்பார் உங்களை; பனிபடர்
நரைமயிர்; ஒங்கிய உடலும்.

ஈடி: இறைவனே !
அறியாச் செய்கையால் சிறுமை இழைத்தவனோ !

யோக: மன்னவா! நடந்தது என்ன? நவில்க;
என்மனம் உம்நிலை கண்டு துணுக்குறும்.

ஈடி: அறிவன் உண்மையை அறிதல் ஒண்ணுமோ?
இதியர்ய் நிறைவிட இன்னும் ஒருமொழி
இயம்புவாய்.

யோக. ஐய! உம் செயல்மிகு அச்சம்
பயக்குதே. அறிந்தவை யாவும் பகருவன்.

ஈடி: வேந்தொடு சென்றமெய்க் காவலர் சிலரோ?
ஏந்தல் உயர்விற்கு ஏற்ற வகையரோ?

யோக: சென்றவர் ஐவர்; தூதுமுன் சென்றது;
ஒன்றே தேர். அதில் இலயசு சென்றார்.

ஈடி: தெளிந்தேன். தெளிந்தேன். தெரிந்தனர் யாரிதை?

யோக: சாவாது மீண்ட ஏவலன் ஒருவன்.

ஈடி: இன்றவன் எங்குளான்? எம்மனை உள்ளானோ?

யோக: இல்லை; திரும்பி இங்கவன் வந்ததும்,
தலைவன் வீட்டில் தங்களைக் கண்டதும்,
நகரில் இருந்தும் மிக்க தொலைவினில்
நாட்டுப் புறத்தில் ஆடுகள் மேய்த்திட
நாட்டம் கொண்டனன், என்னைக் கோதியே,
விடுதலை கோரி வேண்டினன்; நாளும்
இணங்கினன். எளியன்! இணையிலா ஏவலன்,
உயர்ந்த ஒன்றினை நயந்து வேண்டிலன்.

ஈடி: காலம் தாழ்த்தாது அவனைக் காணுதல்
ஏலுமோ?

யோக: ஏனும். எதற்கு?

ஈடி: நங்காய்!
நெஞ்சில் எண்ணிய நினைவிறந்து மொழிந்தனன்;
அஞ்சுவன்; ஆகையால் அவனைக் கண்டு
கதைத்திட வேண்டுவன்.

யோக: காணலாம், கதைக்கலாம்.
இதற்கிடை, உங்கள் இதயம் வாட்டுவது
என்னவோ? பொய்யாது எனக்கு மொழிகுவீர்.

ஈடி: ஆகுக. என்னுளம் நோக்கிய வாங்கு
நிகழ்வுகள் நேர்ந்திடின் நினைத்தே என்கதை
பகருவன் முதன்முறை; பரிந்து கேட்பாய்!
கொரிந்து பயந்த அரசர் பொலிபசும்
தொரிசர் இனத்து மேரோபி அரசியும்
என்னரும் பெற்றோர். என்னகர் தன்னில்
பன்னரும் உயர்வு பெற்றுநான் மிளிர்கையில்,
வியத்தகு அதிசயச் செய்தியொன்று என்செவி
விழுந்தது. ஒருகால் விஞ்சிய பெருமை
அளித்தனோ அதற்குநான், அறியேன். ஒருநாள்
உடனிருந்து உள்ளோடு உண்டான ஒருவன்
குடிமகைப் போதையில் குழறியே, நான்என்
தந்தையின் மகவலன் என்று தருக்கினன்.
சிந்தை நொந்தும் சீற்றம் இன்றிநான்
புனரும் அளவினில் பொறுத்தனன். மறுநாள்
உண்மை உணர்த்து மாறென் தந்தை
தாயரை வேண்டவும், வாய்மை பொருந்தா
வசைமொழி கூறும் வலிமை ஒருவர்க்கு
இசைந்தது கண்டு அவர் எரிந்து கனன்றனர்.
அமைந்தது என்னுளம். ஆயினும், நிலைத்தது
குமைவு. கதையோ குலவியது உலகெலாம்.
எனினும் ஒருநாள், என்னுளம் பொறாது
பைதோ தன்னைப் பரவி, உண்மை
மொழிகென வேண்டினேன். இழிமையும் கொடுமையும்
கலந்ததோர் கூட்டுரை விடையாய்க் கிடைத்தது.
கலங்கிய தென்னுளம். சொல்லவும் நாவிழும்.
மன்பதை தனக்கு மாளா வசையாய்
என்றன் ஆருயிர் எந்தையைக் கொன்றென்,
அன்னையை மணந்து பல் அறம்பிழை மக்களைப்
பெறுவேன், என்ற மறுமொழி கிடைத்தது.
உரையிது கேட்டதும், உளமிசை வெந்து,
கொரிந்தொடு என்விதி சரிக்க, மறித்தும்
என்மனை மீளா முன்னம் துரப்ப,
புன்கண் இதுபோல் ஒன்றும் நேராது
ஒழிப்பான், நகர்விட்டு ஓடினன் கவன்று.
வழியில் உன்னிறை மடிந்த புலத்தயற்
கூடாகச் செல்லல் உற்றேன். அன்பே!
கேட்பாய் உண்மையே இளப்பன்,
மூன்று வீதிகள் முயங்கும் புலத்திடை
நான்வர நேர்ந்ததும் நண்ணும் வழிமுன்
னாதன் முன்செலத் தொடர்ந்த மாவுர்
தேர்மிசை நீமுன் தெரிந்த வண்ணம்
ஓராள் இருந்தனன்; ஒதுங்கென எனக்குக்
கூறினன் சினந்து கூட்டத் தலைவன்.
பணியதை ஏற்றுஓர் பாங்கன் என்னை
எற்றினன்; மீதூர் செற்றம் முடுக்கவும்
தாக்கினன் அவனைநான்; தேர்மிசை சாய்ந்திதை
நோக்கிய முதுமகன், சந்துநான் நகர்வரை
தாங்கி, வலவனின் இருகூர்க் கலத்தை
எடுத்து வீசினன் என்தலைமீது
கலமென் தலையினைக் கலக்கவும் என்றன்
வலக்கரம் உறையுமில் வார்கோல் மிடியல்
விரைவினில் முடிந்தது உறவினை முதுமகன்
வண்டியி லிருந்து மண் தலையுறச் சாய்ந்தனன்
நின்றார் யாவரும் என்கையால் இறந்தனர்.
இலயசு குருதியில் அயலவன் நாளம்

கலந்திடில் என்னினும் கடையவன் யாருளன்?
இறையொடு உலகோர் வெறுப்பர் என்னை,
என்னையே அன்றோ அயலான் குடிமகன்
மனை கொள மாட்டான். என்னுடன் ஒருமொழி
மாறவு மாட்டான். மற்றவர்க் கென்று
சீறிநான் இட்ட சாபமும் என்னையே
சூழ்ந்தன. மன்னனை வீழ்த்திய கைகளே
மனையைப் பற்றின. என்பவ மிலவோ?
அறவே இழிந்த தறுகணன் எனைப்போல்
எவரும் உளரோ? இந்நகர் நீங்கலும்
என்னரும் தந்தையர் பொன்னகர் நண்ணாச்
சூரும் என்னைத் தாழ்த்திய தேதுகள்.
தந்தைநாடு தவிர்த்திடல் வேண்டும்.
இன்றேல் எந்தையைக் கொன்றென் அன்னையை
மன்றல் செய்வனாம்! என்னரும் தந்தையை,
பொலிபசை,. எனக்குரியர் நல்கிய கோவினைக்,
கொல்வதா? கொடியதோர் கடவுள் அன்றி,
பொல்லாப் பாம்படு பொய்ப்பினை என்மீது
ஏவுவார் யாருளர்? இறைவா ! விண்ணகம்
மேவிய அரசே!. வேண்டாம் எனக்கிக்
கொடுமை. இழிதகை வடுவிற பெறநான்
வாழ்வதில், மடிந்தும் மண்முகம் புலனற
மாய்வது மேல்.

குழ: ஐய! மொழியிவை வெய்ய.
சான்றுகள் கூறுப ஆன்றி நோக்கி
உண்மை தெளிவுற ஓர்வரை உள்ளம்
மாய்த்திட வேண்டா.

ஈடி: ஆயன் வரும்வரை,
ஆறி இருத்தலே ஏற்றவோர் வழியாம்.

யோக: ஆயனால் ஆம்பயன் யாது விளம்புக?

ஈடி: அவன் மொழி உம்சொல் அணையின்றான் உய்ந்தனன்.

யோக: இவ்வையம் குறிப்பாய் எப்பொருள் சார்ந்தது?
யாதுநான் கூறினேன்.

ஈடி: இலயசை, கள்வரே
கொன்றனர் என்றவன் கூறினன்; ஆக
இன்னும் கள்வரே கொன்றனர் என்றவன்
நின்றிலன் நானலன் கொன்றவன்; ஒருவன்
என்பதோ ஒருவனே. அன்றித் தவிநடை
சென்றவன் கொலையினைச் செய்தவன் என்றவன்
செப்பிடில் நானினித் தப்புதல் அரிது;
துப்பும் தவறாது சுட்டும் என்னையே.

யோக: ஆயன் இயம்பியது என்று நாம் சொல்லியது
உண்மையே. இனியவன் பிணங்கி உரையான்;
என்னோடு இந்நகர் உரையுநர் யாவரும்
அவனுரை கேட்டுளர் அன்னவன் கதையினைச்
சிறிது மாற்றினும் குறிகர் முறையில்
இறந்தனன் இலயசு என்றிடல் இயலாது.
என்னை! இலயசிற்கு என்றன் குழந்தை
ஒன்றினால் மரணம் இயலுமென் றலொட்சியசு
கூறியும் அம்மொழி கூடவே இல்லை.
தேறியது என்றன் செல்வனின் சாவே.
இறைமொழி உண்மை இருந்தவா றென்னை!
மற்றதன் பின்னர் மனங்கொளேன் இறைமொழி

ஈடி: உன்சொல் செவ்விது எனினும் ஆயனை
இவ்விடம் பெயர்வதற் கேற்றது செய்க.

யோக: தவறாது செய்வேன் தங்கள் கருத்திற்
கொவ்வா செய்திடேன். உள்ளே வருக.

குழு: மூவா நின்றருள் முதல்வன் ஆணையின்
சாவா மடியர் தளரா முறையினில்
தாவி வான்வளர் தேமுறை சொற்பொருள்
மேவி வாழ்வேம் வீங்குயர் காதலில்

செருக்கினால்செழிக்கும் வெங்கோல்; வெளவிய
மருள்முறைக் கொள்ளையால், மறையுறை மனையின்
நின்று செருக்கும் நன்னிலை நளர்ந்து
மண்மேல் வீழ்ந்திடும் பனிக்கெனச் சமைத்த
ஊக்கினை விதிகள் தக்கா; இறைவனும்
ஊக்கியே அதனை ஒம்புதல் செய்வான்.

செவ்விய நேர்மை, தெய்வ அணிகலம்
ஒவ்வா எம்பார்க்கு அமையுமோ செருக்கும்?
தீவியம் கடிவார் எவ்வகை வெல்வார்?
கவ்வுமன் தண்டம் தப்புமோ அவன்செருக்கு?

அறதிநினும் மறமவாவு அவனையெக் கவசம்
இறையின் பொல்லாச் செறுவினில் காக்கும்?
நெறியிகழ்ந் தநீதி ஏற்றிடின் தெய்வ
முறைமையால் மேவு மேன்மை யாது சொல்?

ஒலிம்பசு, அபயன் நிலமகள் ஆகத்
திருமனை யாவும் உரைகுறி, தம்மில்
பொழுதிது பொய்ப்பின், அழிந்திடல் நலமே.
மானுடர் உம்மொழி மதியார் இனிமேல்.

அனைத்துமாள் சூசு! வாழுதி யாயின்
இன்றே விழிக்க! பண்டை அறிவர்
மனநலம் அழிந்தனர். அப்பலோ புகழ், பெயர்
குன்றி மறைந்தன; குவலயம் எங்கணும்
மனித குலத்தின் தைவிகம் கண்டிலம்.
(அரண்மறையிலிருந்து யோகதா வருகிறாள். மாலை சூட்டிய
கிளை ஒன்றும் நறுமணப்புகையும் கொண்டு வருகிறாள்-)

யோக: தெய்வப் பெரியீர் செய்க தறியேன்;
தைவிக மனைகள் சேர்ந்தென் பணிவுளம்
பரவு நொக்குடன் நறும்புகைக் கொடையும்
கரங்கொள் பலியும் கொண்டிவண் அணைந்தேன்.
திரிபுக் காட்சிகள் அரசரை வருத்திடும்;
பயத்தைப் பெருக்கும், ஒவ்வொரு பதத்தையும்
உளத்தில் ஏற்றவர், பழமையால் பொழுதிதை
அளக்கும் ஆற்றலும், இழந்தனர்; இவரைத்
தேற்றும் வகையும் தேரிலேன்; எம்மனை
அருத்தறை மின்னொளிர் அப்பலோ! இறைவ!
நினக்கே எம்முதல் தப்பப் பராவல்
புன்மையின் சாபம் போக்கி எங்கட்கு
இன்னருள் புரிக; எம்பதிப் புரவலர்
தன்புறல் கூடு சோர்ந்தனம் உள்ளம்.
(கொரிந்திலிருந்து ஒரு தூதன் வரல்)

தூதன்: அன்னியன் எனை மன்னித் தருள்வீர்.
அரசர் ஈடிபசு அரண்மனை நாடினென்.
செல்வழி எனக்குச் சொல்லுதல் கூடுமோ?
இல்லை, அவருள இடமது ஆகுதல்
அறியின் எனக்குத் தெரிப்பீர், பெரியீர்!

குழு: இ·தவர் அரமலை; அவரகம் உள்ளார்,
இவரவர் மனைவி; தவப்பெரு மக்களள
அரசர்க் களித்த அரும்பெறல் அணங்கவர்.

தூதன்: அரசி வாழ்க! அமைவே சேர்க!
பெருந்தகைக் கேற்ற பெண்மகள் இவளே.
வாழ்க அவள்மனை ஜழியிற் பொலிந்து!

யோக: வாழ்க நீரைய! ஆழ்ந்தவும் வாழ்த்தினில்
மகிழ்ந்தனம்; நன்றி. மன்னரைக் காண்பது
செய்தி கூறவோ; செய்பணி யாதும்
வேண்டவோ சொல்க.

தூதன்: மாண்தகு செல்வி!
இன்பதி அவர்தம் மனையகம் மலர்க்கும்
இன்மொழிச் செய்தி.

யோக: யார்வயின் இருந்து
கொணர்ந்த செய்தி?

தூதன்: கொரிந்தில் இருந்தும்
செய்திகேட்டு நும் சிந்தை மகிழ்வுறும்;
ஐயமின்று; ஆயினும் நொந்துளம் நைதலும்
நேரும்; முன்புடன் நேர்மகிழ்வு மூட்டும்.

யோக: அத்துணை ஆற்றல் அமைந்தது யாதோ?

தூதன்: எவ்வாடு, ஈடிபசை, ஈசுமசு முழுவதும்
மன்னவர் ஆக்க முன்னம் கொண்டது.

யோக: என்ன! பொலிபசு இனியரசு அல்லரோ?

தூதன்: அன்னையே! பொலிபசு மன்னன் இறந்து
பன்னாள் கழிந்தது.

யோக: என்ன! ஈடிபசு
மன்னர் தந்தை மறைந்தது உண்மையோ?

தூதன்: வாய்மையே மொழிந்தனன் தாயே.

யோக: (பணிப்பெண்ணிற்கு)
பெண்ணே, அரசர்க்கே சொல் விரைவில்
உரைப்பாய். (பெண் செல்லல்)
தெய்வ முன்மொழி செய்தவை யாவோ?
யார்கொலை தம்மால் நேருமென் றஞ்சி
எவர் முன் ஈடிபசு தவிர்த்தனர் இத்தனை
ஆண்டுகள், அவரே ஈடிபசு இன்றியே
மாண்டனர் இறுதியில்.
(ஈடிபசு வரல்)

ஈடி: அன்பிடை யோகதா!
மீண்டும் வெளிஎனை விளித்தது ஏனோ?

யோக: கேட்க தூதினை; கேட்டபின் புகழ்பெறு
அறிவர் எதிருரை ஆற்றலை ஓர்க.

ஈடி: யாரிம் மனிதர்? யாதிவர் தூது?

யோக: கொரிந்தில் இருந்திவர் கொணர்ந்தனர் செய்தி.
அரசர் பொலிபசு இறந்தனர் - இறந்தனர்.

ஈடி: ஐயனே! நீரே செய்தியைக் கூறுக.

தூதன்: முதலினை உணர்தல் விருப்பெனில் மொழிகுவன்
மன்பதை செல்வழி மன்னனும் செல்றனன்.
என்மொழி உண்மை நம்புக மன்னா.

ஈடி: பிணியதை முடிந்ததோ? பிறர் வினை மாய்த்ததோ?

தூதன்: முத்தகண் முடிட மூண்ட சிறுபிணி
மாய்த்தது மன்னனை. மன்னன் பாவம்!

ஈடி: பிணியினால் மன்னன் பொன்றினன் என்பதின்
என்னமோ? கூறுக.

தூதன்: பினியொடு ஆண்டுகட்
பனிச்சுமைப் பாடும்.

ஈடி: பனிமொழிப் பேதாய்!
புதினம் அறிந்தனை. என்னும் அயராது,
எதிருரை ஒன்றையே என்மீது முழங்கும்
முதியரும் அறிவரும் பிதியன் தீயும்,
யாண்டு சென்றனர்? யானென் தாதையைக்
கொன்றிட வேண்டும் என்பது எதிருரை
என்ன நேர்ந்தது? எனினும் தாதை
கல்லறை போக, நான் தலமே தானாக்
கரத்தொடு இங்குளன். ஒருவழி என்னைப்
பிரியர் அவருயிர் பறித்தது எனலாம்.
எனினும் தந்தையைக் கொன்றவன் நானே
ஆயினும் அறிவினின் ஆகும் எதிருரை,
கொந்முனை சோர்ந்தே, என்னுயிர் நீங்கிய
பொலிபசு பொல வலிபிழைத் தழிந்தது.

யோக: இதுவரை இவ்வாய் இயம்பினன் தேர்ந்திலை.

ஈடி: இயம்பிய தன்மையே எனினும் பயமெனைப்
பிழைக்க வைத்தது.

யோக: பழையன நினையேல்.

ஈடி: எனினும் அஞ்சுவது இன்னொன்றுளது. என்
அன்னை இன்னும்.....

யோக: அச்சமா? அதனோடு
ஆடவர் கொளத்தகு கூட்டம் என்னவோ?
வாழ்வினில் எங்கனை ஆள்வது தற்செயல்
உறுவது யாதும் அறிந்திலம் முன்னர்.
நாள்தோறும் இயல்வரை நலம்பெற வாழ்குவம்
தாய்மனச் சிந்தையின் நோய்ப்பயம் கொள்ற்க.
எத்தனை மைந்தன் இத்தகை கனாப்பனி
கொண்டுளம் நொந்தனர்? மன்னிதில் வாழ்க்கை
சிறக்க வேண்டினன். மறக்கவிக் கனாவினை

ஈடி: அன்னை இறந்தனள் என்னின் நிறையமே
உன்மொழி; அன்னவள் இன்னும் வாழ்கிறாள்.
என்ன வார்த்தை நீ இயம்பினும் அச்ச
மின்றி என்மனம் நின்மொழி ஏற்குமோ?

யோக: எனினும் தன்தை இறந்தோர் தேறுதல்
அன்றோ.

ஈடி: உன்மை எனினும், அன்னவன்
இன்னுயிர் உளவரை என்றிலை பாழே.

தூதன்: மன்னவ, பொன்தருள் இன்நீர் அஞ்சும்
பெண்மகள் யாரோ?

ஈடி: பொலிபசின் மனையாள்,
மெரோபி அரசி.

தூதன்: அரசவள் வாழ்வு
தங்க ருயிரைத் தாக்குவ தெங்ஙனம்?

ஈடி: மரணம் பொழியும் அறிவன் உரையொன்று
எம் தலைமீது வந்துள தைய.

தூதன்: முறையில் பிறந்தும் மொழியுந் தகையதோ?

ஈடி: தகையதே. என்கையால் தன்தையின் குருதியை
உருத்தவர் இன்னுயிர் ஒழித்தென் அன்னையை
மனையெனக் கொள்ளும் மாள்வெனக் கெய்தும்

என்றனன் உலொட்சியசு. இதனால் அன்றோ
பன்னெடுங் காலம் என்னருங் கொழுந்தினைப்
பிரிந்து வாழ்ந்தனன்; ஒன்றிரு வாழாக்
குரவர்க் கீடு கூறுதல் அரிதே
எனினும் இயல்வரை நன்றே வாழ்ந்துளேன்

தாதன்: நாடு துறந்து நலிந்த காரணம்
கேடுறும் எதிரரை கெட்ட தனாலோ?

ஈடி: எவ்வகை யாயும் எந்தை ஆருயிர்
வவ்வுதல் தவிர்க்கும் விரதம் பூண்டனன்.

தாதன்: எனினும் மற்றை எக்கம் போக்குவன்.
நன்மை செயவே நானிங்கு அனைந்தனன்.

ஈடி: நன்றியை நானோர் நாளும் மறவேன்.

தாதன்: உண்மை சொல்லின், உம்மகம் மீண்டதும்
வேண்டும் நன்மை விரும்பிச் செய்வீரோ?

ஈடி: என்னகம் செல்லவா? என்முகம் பெற்றோர்
தம்மகம் அனையேன் நம்புக. சத்தியம்.

தாதன்: என்னரும் இளவல்! என்ன ஏமாற்றம்!

ஈடி: எவ்வயின் ஐய! அவன்மீ தாணை!
வியம்புக உண்மை.

தாதன்
தாதன்: இல்லம் சேர்க;
மயங்க வைத்திடும் பயமிது.....

ஈடி: ஆமதற்கு என்ன? பீபசு சொன்மொழி பொருந்துதல்
என்வயனி கூடுமம.

தாதன் உம்மிரு குரவர்
தம்வழி பாபம் சார்வலி பொய்க்குறை.

ஈடி: ஆமாம் என்முகம் ஆகம் துளைத்திடும்
சோகம் அஃதே.

தாதன்: யாவும் பொய்யே;
அய்யனே உங்கள் பயங்கரும் வீணே.
நியாமும் அற்றவை:

ஈடி: நேர்மையில் அவர்கள் மைந்தன் நான்
மைந்தன் நான், எவ்வாறு பொய்யாம் என்பயம்?

தாதன்: அரசர் பொலிபசு, உறவினர் அல்லர்.

ஈடி: என்ன பொலிபசு! என்றன் தந்தை
அல்லர்!

தாதன்: என்னைப் போலவே, அல்லர்.

ஈடி: உம்மைப் போலவா; என்ன தென்பொருள்?
தேறிலேன் ஐயனே நேரிதில் விளக்குக.

தாதன்: எவ்வயின் யானும் தாதை அல்லனோ,
அவ்வயின் அவரும் தாதை அல்லர்.

ஈடி: ஆயின்நான் தனயன் ஆயி எங்ஙனம்?

தாதன்: மொழிகுவன் அரசே. மகனாய் அவர்க்குமை
அளித்தவன் நானே.

ஈடி: அளித்ததா! இருந்தும்
பெற்ற மகனெனப் போற்றினர் என்னை.

தாதன்: பிறமகார் அவர்க்கிலை.

ஈடி: என்னை எங்கோ
கண்டனர். இல்லை கொண்டனர்.

தாதன்: கண்டேன்,
மரஞ்செறி சித்திரன் மறைவினில் ஒருநாள்

ஈடி: அங்குனைச் செலுத்திய அலுவல் யாதோ?

தாதன்: மனலமினச ஆடுகள் மேய்த்தல் என்தொழில்.

ஈடி: ஆயின் நீ கூலி கொள் ஆயனோ கூறுக.

தாதன்: ஆயவன்; அவ்வாறாய நற்பேறு
ஒன்றினால் உம்முயிர் உம்பிய வாய்ப்பினன்.

ஈடி: என்னைநீ கண்ணுறும் அமையும் தீங்கோ
துன்பமோ யாதெனைச் சூழ்ந்தது விளம்புக.

தாதன்: கணைக்கால் நொய்ம்மையே சரிதையைக் கூறும்.

ஈடி: பண்டைப் பிணியை மீண்டும் கதைக்கவோ?

தாதன்: கணைக்கால் பிணைத்த கான்முளைக் கட்டினை
வெட்டியோன் யானே.

ஈடி: வாய்மையே மொழிந்தனை.
தொட்டிலில் தொடங்கிய வடுவதை என்றும்
அறியுமே என்றடல்.

தாதன்: பிணிப்பதால் அன்றோ
ஆய்வு நின்றும் இயலும் நாமமும்.

ஈடி: இறைவா! இதனை இயற்றியோர் யாவர்?
அன்னையோ ஐயனோ!

தாதன்: அறிகிலேன் ஐயனே!
உன்னிடம் உம்மை ஈந்தவன் அவனை
வினவுக.

ஈடி: வினவவா? என்ன! நீயே
என்னைக் கண்டிலை என்பதன் கருத்தோ?

தாதன்: அன்றோர் ஆயன் என்னிடம் உங்களை
அடைக்கலம் அளித்தனன்.

ஈடி: அன்னவன் யார்? அவன்
பெயர் யாது? கூறல் இயலுமோ?

தாதன்: இலயனின்
பேர்களில் ஒருவன் அவனென அறிவேன்.

ஈடி: என்ன இலயனா? எங்கள் பண்டை
மன்னன் அல்லனோ?

தாதன்: மன்ன இலயனே.

ஈடி: அன்னவன் உயிரொடு இன்னும் உளனோ?
அவனைக் காணுதல் இயலுமோ?

தாதன்: இயலும்; உங்கள் அவையோர் அவனை அறிவரே.

ஈடி: ஆன்ற, பெரியீர் தாதன் உரைத்த குறிகள்
பொருந்திய இடையனைத் தெரிந்தவர் யாரும்
உளீரோ? நகரிலோ வெளியிலோ அவனை

யாரும் கண்டிரோ? அறிந்திடின் உரைக்க.
மறையினின் ஆழம் அறிதந் கிலவே
இயைந்தநல் அமையம்.

குழு: ஏலவே நீங்கள்
அறிய நாடிய நாடவன் அவறாய்
இருத்தலும், கூடும்; எனவே எங்கள்
அரசியே இதனை அதியாய்க் கூடும்
தகைமை உடையார்.

ஈடி: தகைமைசேர் மாதே!
இவ்விடம் அழைக்கநாம் அவாவிய மனிதனை
அரிவாய்; தாதன் கருதும் மனிதன்
அவனோ?

யோக: (பதியால் வெருத்து)
இத்னால் ஆவது யாதோ?
தாதன் யாரைச் சொல்லின்? ஒன்றதால்
பேதம் ஒன்றிலை தாதன் அதிய
யாவும் மறக்க. ஆவல் ஒன்றிலை

ஈடி: பேதாய் பயவில பேசேல் என்றன்
பிறப்பின் மறைவினை அறிவரை, உளவிதை
ஆதியோ டந்தம் ஆய்தல் வேண்டினேன்.

யோக: வேண்டாம், ஈசன் ஆணை! வாழ்வது
வேண்டில் விடுகவிவ் வேட்டை என்பினில்
அடியேன் உன்றன் அமையும்.

ஈடி: அன்பே!
விடுவாய் நடுக்கம். வீண்பயம் ஏனோ?
மும்மையும் தொடர்ந்த முறைமுறை அடிமையாய்
வாழ்ந்தேன் எனினும் தாழ்விலை உனக்கே!

யோக: ஆயினும் தவிர்கவுன ஆய்வினை. பரிவொடு
வேண்டினன், விடுகவிவ் வேட்டையை.

ஈடி: யோகதா!
வாய்மையை அறியாது ஓய்ந்திட மாட்டேன்.

யோக: என்வழி நன்மையை எண்ணியே
கட்டுரை கூறினேன். காப்பதும் கடனே.

ஈடி: நன்மை என்றொரு நச்சர வெண்மமே
நின்ற நமனென நலித்தது போதுமே.

யோக: பாழே உலக்கும் ஏழை மனிதனே!
உண்மை அறிய உயிரொடு வாழவோ!

ஈடி: யாரே ஆயினும் இடையனைக் கொணர்வீர்.
காரிகை இவள்தன் சீரிய பிறப்பில்
பெருமகிழ் வெய்துக; வருவது வருக.

யோக: பாழும் பழியும் ஆக்க உம் விதியை!
இனவே என் இறுதி வார்த்தை.
ஒருசொல் இனிநான் உரைப்பதற் கில்லை.
(போகிறாள்)

குழு: எதிருமன் என்பினை என்னியே அரசி
கதிநிலை கலங்கிக் கடிது மறைந்தனள்.
வெளிச்சொல் மறுக்கும் மொழியிதில் யாதோ
பதிபடர் இடரும் வெளிப்படல் கூடும்.

ஈடி: எத்துணைக் கயமை, எத்துணைக் கீழ்மை!
அத்தனை பாழும் அம்பலம் ஆகுக.
என்றன் பிறப்போடொன்றிய மறைவினை

மன்: ம்னீர் படுத்தல் என்கடன் ஆகும்.
பெண்ணின் பெருமையில் எண்ணம் நிலைத்த
பெண்ணிவள், என்றன் பிறப்பின் நிமையில்
புன்படும் மனத்தினள்; நன்மையை நல்கிடும்
தன்னளி வண்மையில் தளையன்றான், நான
அனைவது ஒன்றிலை; வண்மையே என்னரும்
அன்னையாம்; பெரும்பொழு தென்னநற் செவ்வியர்
என்னுடன் பிறந்த கன்னியர்; அவர் தம்
பருவச் சுழலொடு உறழுமென் உயர்வும்,
வீழ்வும்; வாழிவில் வாய்த்தபின் வேற்றவன்
ஆக விழையுமோ என்னகம். பிறிப்பின்
ஆதி அறிந்தே ஆறிடும் என்னளம்

குழு: முன்னவர் மதியெனைப் பிழையா
தென்னின், நாளை எழுமதி
எமபதி பிறப்பின் மறையினை
அம்மல மாக்கிடும்; சிதரன்
நாமமெம் சிந்து நிறைந்திடும்.
எம்பதி தந்தையாய் செவிலியாய்
அமைந்தவன் புகழ்மிக ஓங்குக:
வீபசின் நிசைவிதற் காகுக.
மலையிலாம் பண்ணின் காதல்
வலைப்படு, வனவர மகளின்
மதலையோ, இன்றேல் உலொட்சியசு
புதல்வனோ, உயல்பசும் வெளிஉலாம்
ஒளியிறை முளையோ, சிலீன்பதி
களிசுதன் இவனோ? எலிகனில்
அரமகள் அளிக்கத் தயோனிசு
கரங்கள் ஏற்ற திவனையோ?

ஈடி: பெரியீர்! தொல்லையில் வருபவன் எங்கள்
ஆயனோ? முன்னர் அவனைநான் அறிந்திலேன்
ஆயினும், அவனே. அவனும் கொரிந்தியன்
நேயமும் ஒத்த ஆயுளர்; அவனை
அழைத்திவன் வபவர் அரண்மனை அலுவலர்
அ:தவன் அலனேல், அவனைமுன் அறிவீர்
உரைப்பீர் உண்மை.

குழு: வருபவன் அவனே.
அவனைநான் அறிவேன் இலயசின் ஆயன்.
அவனவர் சேவையில் அமைந்தவர் எவரையும்
அனையநற் பண்பினன். அதிலோர் ஐயமின்மை.
(முதிய ஆயன் ஒருவன் பசியாள்களுடன் வருகிறான்)

ஈடி: கொரிந்தியுன் தாத! உரைக்க முதற்சான்று.
உன்னரைப் பொழுதிற் குரியவன் இவனோ?

தாதன்: அன்னவன் இவனே.

ஈடி: ஆயநல் மகனே!
எனைப்பார். என்றன் வினாவிற் கேற்றநன்
மொழிதரல் உன்கடன். முந்திநீ இலயசின்
தொழும்பனாய் ஒழுகிய உண்டோ?

ஆயன்: உண்டு ஐய;
அவன்பிறந்து வளர்ந்தவன்; வணிகப் பொருளலன்.

ஈடி: எவ்வகை முயற்சியில் ஈடுபட் டுழைத்தனை?

ஆயன்: ஆயுளிற் பெரும்பால் ஆயனாய் வாழ்ந்தனன்.

ஈடி: நாடெதில் நின்வினை ஆற்றினை; கூறுக.

ஆயன்: சிதரனோ, அயலோ, சிந்தையில் இல்லை.

ஈடி: முன்னிம் மனிதனைக் கண்டது உண்டோ?

ஆயன்: இவர் யார்? எங்கு நான் இவனைக் கண்டேன்!

ஈடி: நன்கு பார். நிம்முகம் தன்னை நீ கண்டிலை!

ஆயன்: நினைவிலை. கண்டனன் என்று நான் கூறிடேன்.

தூதன்: எனக்கதில் வியப்பிலை; நினைவு கூர்ந்திட
ஒன்று சொல்குவன். பன்று சிதரனில்
அவனிம் மந்தையும் நானொரு மந்தையும்
கொண்டநல் அயலறை ஆயராய், அமைந்தனம்.
வேனில் தொடங்கி வீழிலை வரைக்கும்,
மூன்று வய பருவம் ஆண்டுநாம் உறைந்தனம்.
வீழ்மழை காலில் நான் மீருவன் கொரிந்து,
நன்பனோ இலையின் பள்ளை நன்னுவன்,
இவ்வழி நடந்தது என்பதென் நினைவு.

ஆயன்: செவ்விதில் கூறினை; சென்மையில் நடந்தது.

தூதன்: நல்லை பன்று நீ ஓரான் மகவினை
நல்லினன் மகவென வளர்க்க நவின்றது
நினைவினில் உண்டோ?

ஆயன்: (பயத்துடன்)
உன்முகத்தொன்றும்
உணர்ந்திலேன். என்ன உரைத்திடில் உவக்கும்
உனக்கு?

தூதன்: நன்ப, உன்றன் நன்மகச்
சேயிதோ உள்ளனன்!

ஆயன்: பேயன் போல்வீன்
பதர்மொழி பகரேல், காக்கதின் நாவினை.

ஈடி: முதிரோய் தவிர்க்க மீதுரை, உன்னிடம்
நேன்மை குன்றாச் சீரியன் போலிவன்
தோன்று கின்றனன்.

ஆயன்: மேன்மை சேர் தலைவ!
தங்களை வருத்திய தெங்ஙன் ஐய?

ஈடி: சேயினைப் பற்றிய கேள்வியைக் கேட்டுமோர்
வாய்மொழி கூறிலை.

ஆயன்: வாய்மை ஓராது
பற்பல கூறிவன்; சொற்பொருள்தேரான்

ஈடி: உரைக்க உளங்கொண்டு உண்மை. தவறில்
வருத்தி அதனைத் தெரித்திடச் செய்குவம்.

ஆயன்: உடல்மிக நலிந்த படுமிழம் என்றனைத்
திருவருள் என்னி வழுத்துதல் வேண்டாம்.

ஈடி: கரந்தனைப் பற்றி இழுகப் பிழிப்பீர்.

ஆயன்: என்ன இதன்பொருள் ஐய! இன்னும்
என்ன அறிவதும் நோக்கம். கூறுக.

ஈடி: அன்னவன் கூறிடும் மகவினை அன்றவற்கு
அளித்தது நீயோ? மொழிக உண்மை

ஆயன்: அன்னவன் யானே. அன்றே நமனைனைக்
கொன்றிலன் என்பதென் பெருந்துயர் பெரியோய்

ஈடி: இன்றது நேர்ந்திடும், உண்மை உரைக்க
மறுத்திடின்.

அயன்: உரைப்பதும் இறப்பினை ஒக்குமே.

ஈடி: இன்னும் ஏய்ப்பவன் என்னமோ?

ஆயன்: ஏலவே
அவ்வாய் அளித்தனன் என்று நான் கூறினன்.

ஈடி: யாருடை மகவது? உனதா, பிறரதா?

ஆயன்: என்மக வன்று; பிறரகம் புகுந்தது.

ஈடி: யாரகம்? யார் மகன்?

ஆயன்: ஐயனே! தேவர்
ஆணை, இனியனை வினவுதல் வேண்டா.

ஈடி: வஞ்மொழி விடுக. விடை உடன் தருக.
நீனிநான் ஏதும் இயம்பில் தவறாயின்
இன்னுயிர் மாய்ந்திடும்.

அயன்: இலயசு மனைவேர்
மகவது.

ஈடி: அடிமையா? அன்றேல் அன்னவர்
பெற்றதா?

அயன்: இதற்கோர் மறுமொழி வேண்டுமோ?

ஈடி: கூறல்உன் கடன்; செவி ஏற்ப தென்பணி.

ஆயன்: அன்னார் மகவென வுன்னுளார் கூறினர்;
உங்கள் அரசியும் உண்மை தெரிந்தவர்.

ஈடி: அவளா மகவினை அளித்தவள்?

ஆயன்: அவரே.

ஈடி: காரணம்?

ஆயன்: அழித்தலே.

ஈடி: என்ன! தான் பெற்ற மகவையா?

ஆயன்: ஆமைய.
கேடுசூழ் கட்டுரை வாட்டுமென் றஞ்சி

ஈடி: என்ன கட்டுரை?

ஆயன்: தனயன் தாதையைக்
கொல்லுவன் என்பது.

ஈடி: நல்லது. என்ன
சிந்தையில் சேர்த்தனை குழந்தையை இவனிடம்?

அயன்: கொல்லு மென்னுமென் சிந்தையில் ஊன்றிட
இல்லை ஐயனே. தன்னகம் தன்னார்
எடுத்துச் செல்வன் என்று நினைத்தனன்.
எடுத்துச் சென்றவன், இன்னுயிர் காத்தனன்.
நிகழ்வில ஆயிற்று நீங்களே அன்னவர்.
ஆயின் பாழ்த்து மாய்ந்ததும் வாழ்வு.

ஈடி: தெய்வமே யாவும் தெளிந்தன; தெரிந்தன.
ஒளிவினி வேண்டாம்; பேரொளிப் பிழம்பே!
பேர்த்தனைக் காணாப் பேதனைக் கழுக்க.
பிறப்பினில் பாவியேன்; மணப்பினில் பாவியேன்.
சிந்திய குருதியில் செப்பமும் பாவியேன்.

(ஆயனும் தாதையும் செல்லல்)

குழு: மாய்புகழ் மாந்தர் மரபெலாம் ஆவதென்?
மாயையில் மடிந்து மய்க்கினில் முடியாத்
தாய்நலம் ஈய்த்த மானுடன் ஈன்டோ?
மாய்புகழ்ப் பெற்றியோர் மகிழ்பெறார் என்பதற்கு
ஆயநற் காரணம் காட்டுமிவ் ஈடிபசு.

மிகவுயர் உத்தியில் தகைச்சிறை அடுத்து
தருபரிசு அனைத்தையும் தகைந்தவர் யாரே?
கீழ்பதப் பேயினை ஆழ்கடல் அமிழ்த்தியோன்.
பாழ்தடுத் தான்டவெம் பேரரன், புகழிறை,
வாழ்த்துமே தீபசு அவன்பதன் வீறொடு.

இதயம் மாய்த்திடும் இன்னல் இதனினும்
உன்டோ?
பதியிழந்து களத்தினில் பாழ்நிலை புக்கவர்
யாண்டுளர்?
பீடுகளாய் ஈடிபசு
தந்தையின் தனயன் ஒருதோள் இயல்கையில்
சிந்திய கான்முளை சீறி யிரன்தோ?
காலம், எல்லாம் கருதா வேளை
கன்டது,
மன்றல் படுடியை, மன - மகன் நிலையினை,
உணர்ந்தது.
இதுவுன் காஞ்சி.
இலயசு மகனைக் கன்டதே பெரும்பழி!
நேற்றென் பேரொளி; இன்றோ மீளாப்
பாழிருள்,
(அரன்மனையிலிருந்து பணியாள் வரல்

பணியாள்: நன்னகர்த் தீபரின் நவையறு பெருமகார்!
என்றும் எங்கோன் குலவழிக் கயராக்
கன்மையும் நன்மையும் பூன்டீர்! இங்குநீர்
கான்பவை கேட்பவை கொன்முளம் கதுவீர்
இசுதர் நர்நிலை பசியின் நீர்நிலை
முழுவதும் மூயலினும் மனையக முவினைக்
கழுவுதல் கூடுமோ? கடிதில் உலகம்
தெரிந்திடும் சூழ்வினை; விருப்புடன் கேட்ட
குரக் கொடுவினை; கரியவை, இவ்வதமைக்
கழுவுதல் இயலுமோ? கூவீர்.

குழு: இதுவரை நிறந்தவை, இதுவரை கன்டவை,
எத்தனை என்னி ஏங்கி அழுதனம்;
இனியும் கதைதான் என்செயும் எமக்கு?

பணியாள்: சுருங்கச் சொல்லின் நிராளி நிறந்தனள்.

குழு: நிராளி எவ்வழி நிறத்தனள்? பாவம்!

பணியாள்: தன்கையால் நிறந்தனள். தனியிழி செயலிதைப்
பன்னுறா மக்கள் உரார் கொடுந்தியர்
என்ன தென்பதை எனினும், என்களால்
கன்டதை, நினைவு கொன்மு அவள் நிறுதியில்
சிந்தை தவித்து நொந்ததை மொழிகுவன்.
உளர்ச்சியில் தவித்தவள் உடன்மனை சென்றதைக்
கன்டீர். ஆங்கவள் கூந்தலை விரல்களால்
பற்றிய வாறு தன் மன்றல் படுக்கை
உற்றனள்; பின்னர் அறையின் கதவினைத்
திறந்து அவள் தீடீரெனப் பின்என்றோ மடிந்த
இலயசை நினைந்தும், தொலைநாள் அவற்குத்
தானீன்றளித்த கான்முளை தன்னை,
தாதையைக் கொன்ற தனயனை, எம்மகன்
தனக்கு, தாய்பிற சேய்களைப் பொல்லா
நலந்தேய் கரவின் பலனெனப் பயந்தனள்,
அன்னவன் தன்னை நினைந்தும், கதறினள்.
பின்னர் இருமுறை தனக்குத் தந்தையும்
தனயனும் கணவராய் அணைந்ததும், மகற்கு

மகவு பெற்றும், அகங்கொள் டழுதனள்.
அவ்வரை அறிவோம். அவள்முடி வுற்றவாறு
அறியோம். அவள்விதி அறியுமுன் அரசனோ
பீறிடும் கூர்க்குரல் பெருக்கிய வாறவன்
முழைந்தனன். அவனையே நோக்கினர் யாவரும்.
சுழன்றவன் உழன்றவன் "வாள், வாள்" எனவவன்
எம்மிடை அரற்றினன். "அம்மனை எங்கே?
அவளென் மனையவள். நான்விதை பட்டதும்
நான்தினை யனுத்தலும் ஆன புலமவள்,"
என்று நம் அரசன் கனன்றவாறு அரற்றித்
திரிகையில், நாமவள் இருப்பிடம் காட்டாது
ஒளித்தன மாக, ஒ பேய் அவற்கு
வழித்துணை ஆயது; தலைவன் ஒருவனின்
விளிக்குரற் கியைய ஒழுகுவான் போல,
உளங்கிழித் தெழுகுரல் எழுப்பி விசையொடு
மூடிய கதவினை மோதிப் பொருந்திய
பூட்டினை உடைத்தறை புகுந்தனன் மன்னவன்.
ஆங்குநாம் கண்ணியை, ஆடுமோர் ஊசலை
தூங்குமோர் பெண்ணினைக் கண்டனம்; அவளும்
கண்டன்ன். கண்டவன் உருக்கும் குரலொடு
பிணிப்பினை அவிழ்த்து, மன்மிசை அரசியை
வளர்த்தினன்; வளர்த்தி அள்ளவள் ஆடையைக்
கொழுவிய பொன்னிழை ஊசியைப் பறித்து
கைத்தொலை விசையொடு தன்கழுள் குத்தினன்.
எத்தகைக் கண்கள்! இனியவன் பழியினை,
புன்செயல் முழினை, புலங்கொளாக் கண்கள்;
என்றுமே நோக்க ஏற்பிலாத் தகையவை
இனிக்கொளக் கண்கள், எண்ணம் இன்றியே
எதிர்பார்த் தவன்மிக ருந்தவர் தம்மேல்
பதிந்திடாக் கண்கள்; பாயிருள் அன்றிப்
புறம்நினைப் பொருந்திடாக் கண்கள்; என்றவன்
பற்பல அரற்றியே பன்முறை கண்களுள்
விழிநீர் குருதியில் அளைந்தீ தாடையின்
நிழிவரை குற்றினன். நிழிந்தவை துளியல;
சேப்புச் சோனையின் சிந்தகான் யாறெனப்
பாவுபேர் அருவியாய்ப் பாய்ந்தன அவைதாம்.
மனைவி கணவன் மறச்செயல் அன்றோ
வினைமூன் டவர்தமை வருத்தியது; ஒத்துப்
பன்டவர் ஈட்டிய பார்புகழ் பெருமை,
பன்புடன் பெற்றது; இன்ப பெயள
தீமைகள், கேடு தேய்வு சாக்காடு
ஏமாற்ம் அல்லல் என்பவை யாவும்
அவர்களைச் சூழ்ந்தன.

குழு: அரசர் இன்மே
அவதியில் உளரோ?

பணியாள்: ஆமாம்; அரசர்
கதவினைத் திறவெனக் கூறினர்; திறந்து
தந்தையைக் கொன்ற தனயனைத் தாயை....
பொல்லாச் அச்செயலைச் சொல்லச் கூடுமே?
தீபசுப் பெருநகர் காவ்க விடுகெனக்
கூறினர். தன்நா கொட்டிய சாபம்
தன்மனை தீன்டாது தவிர்க்க நாட்டினை
மன்னன் துறப்பினும் துறப்பன்; எனினும்
துன்புடும் அன்னவற் குறுநல் வழித்துனை
ஒன்றுமே இல்லை. இனிதை அறிவீர்;
கதவுகள் திறப்பதைக் காவ்க; அங்குநம்
இதயம் தீய்ந்திட எழுமோர் துன்பக்
காட்சியைக் காண்பீர். வெடிப்புமே கானிடில்
கரைந்து நீரும் காட்சி.
(ஈடிபசு குருடனாக வரல்)

குழு: என்னும் நான் எதிருறாப்
பொறுக்கரும் கொடுமை;
புன்மைதோய் மாற்றம்;

பொல்லா அழிநிலை;
புலம்பொறாத துன்பம்;
என்னபாழ் ஊழோ,
மின்னைச் சாடி
உமைமன் படுத்தது.
துன்புறும் தலையே,
கண்கொள் ஆற்றேன்.
கண்ணினை பொத்துவன்.
என்னகர் விழைவது
கண்மணம் தரியேன்;
செவிகொள் அவாவை
சிந்தையில் அடக்குவன்.

ஈடி: தாங்கரும் துன்பமே
யாங்ஙனன் நான்தான்?
வளியினில் மிதக்கும்
ஒலியென் குரலோ?
எத்தனை வீதியோ
எய்திய தெனக்கு!

குழு: செவிகொள இயலாச்
செவ்வியும், கண்கொள
முடியாக் கொடுமையும்,
படிந்தது அவ்விதி.

ஈடி: விடியலோ இல்லாக்
கொடிய விலக்கரும்
இரவே!
வலியுமே அகற்றரும்
பழிப்பரு முகிலே!
மீள்மீள் என்னகம்
கீண்டிடும் நோவே!
ஊனிலும் என்னுயிர்
ஆழ்நினை வதனிலும்
ஊன்றிய துன்பே!

குழு: உண்மை. உண்மை ஊனிலும் உளத்திலும்
எனவிம் தரத்திலும் நோல்தரும் இந்நோ!

ஈடி: என்னரு குள்ளவர் என்னும் பிறழா
என்னரும் நண்பரோ?
கண்ணிலி எனக்குத் துணைவழி உம்கையே.
இன்னுமென் அருகினில் உளிரோ?
என்செவி வீழ்குரல் ஈமதே ஆயினும்
கண்டிலன் உம்முகம்.

குழு: இதுசெயல் புரிய எவ்விதம் துணிந்தீர்?
எத்தகைக் கொடுமையோ இவ்வழி உந்தது?

ஈடி: அப்பலோ நண்பரீர்! ஆமாம் அப்பலோ!
இப்படு துயரென் இதயம் திரித்தனன்;
இஃதவன் செயலன்று என்னெயல் காண்க;
எல்லாம் புன்கணே ஆயவென் கண்களால்
நல்லது யாதும் ஆருமோ நவில்க?

குழு: இவ்வுரை மறுத்தல் இயலா தெமக்கு

ஈடி: யான்கண் டுவக்க யாளர் எங்குளது?
கண்செவி மகிழ்ந்திடக் கவினெங் குளது?
நாடிதை விட்டு நெடுந்தொலை போக
உறுதுணை செய்வீர் ஊழ்த்தனன் பாவி;
தேவரும் வெறுத்த பாவியர்ப் பாவிநான்.

குழு: இருநோ உற்றீர்; உயிரிலும் ஊனிலும்
உற்ற முரணிதை அறியா வாழ்க்கை
இயைந்திடன் எத்துணை நன்மையாம்!

ஈடி: என்காற் பனியுத் தெனக்குயிர் அளித்த
நன்னன்! அவன் தலை நாசமாய்ப் போக!
இறப்பிற் கவ்வுயிர் ஈன மாற்றாம்.
எனக்கும் என்னவர் எவர்க்கும் இறப்பு ஓர்
நன்மையாய் அமைந்திடும்; நாசமும் இலையாம்.

குழு: நாமும் அதனையே நச்சி யிருப்போம்.

ஈடி: தந்தையைக் கொன்றோன், றையிலி, முடிவில்
ஈனத் துதித்தோன், தம்பியர் தனயர்
ஈன்ற தாய்ப்பதி, ஈடிபசு என்றில்
வுலகம் ஜரையா ழிவசை ஒன்றிலை.

குழு: எனினும் ரச்செயல் ஏற்புடைத் தன்று.
குருடாய் வாழ்வதில் மரணம் மேலாம்.

ஈடி: தெனினும் உவந்தது இயலு மென்பதை
இதயநான் கொள்ளேன்; இதைவிடப் பிறவழி
எனக்குப் புகலேல்; இருகாட் டப்பால்
புன்கண் ஒளியுட்ன் எவ்வயின் எந்தையை
நோக்குவன்? இறப்புமே ஈடுசெய் முடியாப்
போக்கரும் பாபமென் அன்னைக் கிழைத்தபின்
நோக்கும் வேண்டுமோ? ஈன்ற வாற்றினை
என்னிலென் மக்களைக் கண்கொள ஏங்குமோ
என்நெஞ்சு? அழகிவை எதிர்கொளக் கண்கள்
வேண்டுமோ? தீபசின் மேலோன் அயர்நிறை
ஆண்மகன் கண்கொளல் ஆகா எனநான்
கடிந்த ரந்நகர்க் கோர்புரம், திருத்தரு
படிவம், இவைதமைப் பார்க்கக் கண்களோ?
கறையினைத் தீங்கினை, கடவிளர் கெடுகென
அறைந்த இலயசின் சதனைக் களைகென
மக்களைப் பணித்தபின், மறுவி ழைத்தோன்
இக்கீழ் முகனென ஏற்றபின், மக்கள்
நோக்கினை எதிரவோர் நோக்கும் வேண்டுமோ?
கேள்செவி ஒழிப்பன், கேடதற் கிழைக்கச்
சூழ்வரி யுன்டெனின்; பாழினில் ஏவுடல்
வீழ்த்திம் வரைநான் வாளே ரிருந்திடேன்.
துன்பம் நண்ணிடாத் தொல்லையில் உள்ளம்
ஒன்றி யிருப்பது உண்மையில் இன்பமே
சிதரன் அன்னாய்! தெதற்கோ என்னைநீ
பேணி வளர்த்தனை? பிறந்த வாற்றினை
நானம் இன்றிநான் நவில வைப்பதில்
மடிய விட்டிடல் மகிழ்ச்சி யளித்திடும்.
குடிநகர் கொரிந்தே! கோலிலாப் பொலிபதே!
தாயக மாய தீரகச் செல்வமே!
அளிசெய்து வளர்த்தவும் இளமகன் சிந்தையில்
பழியொடு பாவம் பிணைந்த தீக்கறைத்
திறம்நீர் அறிவிரோ? சேயவள் தாய்மையில்
மறமும் கொடுமையும் மண்டி மடிந்தது
அறிவிரோ? காட்டின் அகல்வினில் முத்தெரு
முத்தும் மோனச் சலக்கினில்ஓ மடிவில்
எந்தை குருதியை எனது குருதியை,
சிந்தை யின்றியே சிந்தி றைத்தனன்.
அன்று நடநதவை யார் நினைவு கூருவர்?
என்ன எண்ணிநான் அன்று தீபசை
நன்னினேன்? முறைதவிர் புனர்வோன்! தோன்றிய
வழிக்கண் ஹன்றிய பழியோன்! தந்தை
மகன் உடன் பிற்ந்தோன்! பிறழ்முறை மன்றலில்
மனைவி, அன்னை, மனமகள் என்பார்
மூவரை ஒன்று. மயக்கிய காதகன்!
மன்குல ழிவெலாம் புனர்ந்தரு வாயவோர்
புன்மையில் படிந்தவன்! புகல்தகாச் செயலவை.
மொழிதகாப் பாழவை; முழுமுதல் தனை,
ஒழிப்பீர் என்னை; ஒளிப்பீர் என்னை;
ஆழ்கடல் அமிழ்த்தி ஆவி போக்குவீர்;
ஈவ்விடம் விட்டெனை எடுத்துச் செல்வீர்;
கருணை காட்டுவீர்; கரமிதைப் பிடிப்பீர்.

பரிந்தெனை வேறிடம் தோக்குவீர். செயலிதற்
கிரங்கேல் செய்பழிப் பயனெனக் குரியதே.

குழு: கிரயன் வருவன் அறிக. நீங்கள்
விரும்பிய செயல்கருக் குரிய வினைதுறை
யாவும் அவர் பொறுப்பாரும் உங்கள்
இடத்தில் இனி அவர் எங்கள் தஞ்சமாம்.

ஈடி: என்னநான் சொல்லுவன், என்ன என் வேண்டுகோள்
அவர்களில் அமைவுறும்? அன்னவர்க் கெளியனேன்
அவமுறப் பிழைத்தபின்.
(கிரயன் வரல்)

கிர: அரசே ஈடிபசு!
உம்பத இழிவினை உன்னி எள்ளவோ,
பண்டையும் பவவினை கண்டித் தரைக்கவோ,
நண்ணிலன் இங்குநான். நன்பரீர் கேட்பீர்!
மன்பதைப் புதல்வர்க்கு உம்கடன் மறுப்பினும்
இன்னுயிர் இறைவன் ஞாயிற் றவன்கடன்
நினைவினில் தரிக்க. தினகரன் குழுள்
புன்மை இருண்மை புலப்படல் ஆகாது;
மன்வளி நீருமே மறுக்கொளல் ஆகாது;
அரமனை அகத்துள் அரசரைச் சேர்க்க;
துன்பிதை இனத்தவர் அன்றி மற்றையோர்
கன்கொளல் பரிவும் பன்புமில் பெற்றியாம்.

ஈடி: நன்ப ஒன்றுநான் நாடுவான்; எள்போல்
பன்பிலான் ஒன்வற் கன்னளித் தருளல்
என்றுமே மறப்பரும் நன்றி யல்லவோ?
எவ்பொருட் டன்றி உம்பொருட் டிறைபுகழ்
புரிதற் பொருட்டுப் பரிந்திதான் றிரப்பன்.

கிர: இங்ஙனம் குழ்ந்துநீர் ரிரப்பது யாதோ?

ஈடி: இக்கணம் என்னை நிந்தகர்ப் புறத்து
மக்கள் கட்புலம் மருவாப் புலத்துச்
சேர்ப்பீர்

கிர: நன்றிதைத் தேர்க; நானதை
அயர்விலன் முடிப்பன்; ஆயின் இறைவன்
உய்ந்நெறி என்னித் தயங்குவன்.

ஈடி: ஏலவே
இறைநெறி எளிதில் அறிதகைத் தன்றோ!
தந்தையைக் கொன்றவித் தாழ்மகன் சொலைவிதிக்கு
இறைந்தவன் அல்லனோ, அன்னவன் எதிருவான்.

கிர: இயம்பியு உன்மையே எனநாம் கொள்ளினும்,
இறைவுமும் இக்கணம் இன்னும் உயிரிய
சான்றுநாம் வேண்டுவம்.

ஈடி: தாழ்வுற் றிழிந்த
ஈனன் எனக்கா ஈசனின் கட்டளை !

கிர: கடவுட் பேண, நல் ஏதுமுன் கண்டிலீர்!

ஈடி: அடியேன் அறிவேன். ஆயின் நின்தயை
உன்னி ஒன்றுநான் உரைபிபன்; அரமனை
தன்னுள் உறங்குநின் சகோதரி ஈம
வினைகளை வேண்டிய விதத்தில் ஆற்றுக.
நன்றதை முடிப்பாய் என நான் நம்புவேன்.
என்னிலை பற்றியோ, என்னுயிர்த் தரிப்பினிப்
பொன்னா டுதைக்குறை புரிய தொழிந்திட,
அருவை; மாமலை அடைந்து நான் வாழ்ந்து
மரித்திட முன்னினேன்; என்பெயர் தன்னுடன்
என்றும் பிணைந்த குன்றே, சிதரன்!
என்னரும் பெற்றோர் என்பிணக் காடெனத்

தேர்ந்த அவ்விடம் சேர்ந்தனான் அன்னவர்
நெச்சைக் கிணங்க நிறப்பன்; எனினும்
தற்செயல் ஏதும் பிழைப் பேதும்
தற்செயல் நேர்ந்திடும் என்றுநான் எண்ணிலேன்;
பின்னரும் பொல்லாப் பீடைக் காளாய்
வருந்த அல்லவோ மரணத்திருந்து
விதியெனை விடுத்தது; வருவீ ருருக.
புதல்வரை நினைந்திடில்! மைந்தரை நினைந்து
கவலேல், கிரயன்! எவனவன் ஏகிலும்
தம்நிலை காக்கும் தகையர் அன்னவர்;
எனினுமென் சிறுமியர் ஏழையர் தந்தையைப்
பிரிந்துள வருந்துதல் அறியார். யாவும்
வருந்து மகர்தென் வசக்கு; அவர் தமைத்
தகுமுறை காப்பாய் கிரயன்; கிரயன்!
ஒருமுறை அவருடல் கரமெடுத் தணைந்திட
அருள்வாய்; ஒருமுறை; அளியும்
பெருமையும் உடையோய்,
ஒருமுறை தீண்டின், ஒருமுறை அவரை
திருவிழி மகிழ ஏற்றவன் அவன்.

(இசுமெனும் அன்றிகனியும் ஈடிபசு முன்
கொண்டுவரப் படுகின்றனர்)

என்ன கண்மணி அனைய என்பிறார்
வெம்பலோ என்செவி வீழ்வது! கிரயனின்
அன்புதான் அவர்களை என்னிடம் கொணர்ந்தது.
என்கண் மணிகாள்
நெஞ்சுதான் உளிரோ?

கிர: அன்னவர் இங்குளர். அவர்மேல் எவ்வளவு
அன்புகொண்டனை என்றும் கொண்டுளாய்
என்பதை அறிந்தே அவனவர்க் கொணர்ந்தனன்.

ஈடி: இறைவன் அருளை என்றும் காக்க!
என்விதி தன்னிலும் இனியதை உனக்கவன்
விதிப்பன். எங்குளீர் புதல்வீர்! வருவிரென்
மருங்கு உம் சகோதரன் கரமிவை பற்றுவீர்.
பண்டு நீ ரறிந்த கண்தமை உங்கள்
தந்தையின் கண்தமைத் தடிந்த கரமிவை.
தந்தையோ, தந்தை யாகையில் அறிவோ
சிந்தையோ இன்றிச் செயல்வழிப் பட்டவன்.
கண்கள் உங்களைக் காணா ஆயினும்,
இணைந்தவை உருக்கும் கண்ணீர் உமக்காய்.
உலகொடு நீங்கள் உறவுகொள் காலை
அலமர நீ படுவதை அஞ்சுவன் என்பி;
அரசுநாள் உயர்நாள் திருநாள் அவையெலாம்
கரிநாள் ஆகிக் கலங்கிநீர் மனை செல,
மற்றைக் கிறாரோ மகிழ்ந்து களிப்பர்.
பிற்றைநாள் மன்றலை விரும்பிநீர் நிற்கையில்
என்மகார் அவர்மகார் அவர்க்கும் ஒருவகை
அனையா தவிக்கும் ஆற்றல் உடைய
மனிதர் இருப்பரோ? என்னகம் நையாப்
புன்மையின் பெயரும் உண்டோ உலகில்?
தந்தையைக் கொன்ற தந்தை, பிறவிப்
படுக்கையைப் புன்மைப் படுத்திய புல்லன்;
தன்பேற் றகவழி தான் பிறப் பளித்தோன்;
எனப்பிறர் எனாவுமை எள்ளுவர் ஆயின்,
கனவரைப் பெறுதல் ஒன்னுமோ உமக்கு?
கண்மணி யனையீர் காவீர் எவரையும்
அன்றியும் தனியிலாக் தன்னிலை என்னவும்
வாழ்வு பாழ்க்கவோ? மெனோசியசு மைந்த!
இன்னும் நீ என்மகார் எனத்தவன் அல்லனோ?
அன்னவர் தனிஒருத் தாதைநீ அல்லனோ?
அன்னவர்க் கின்னுயிர் அளித்த நாமெலாம்
பொன்றினம். கதியிலிப் போக்கது சிறுமிகள்
மனைபதி யிலராய் வாடுதல் வேண்டா.
எனக்கு நேர்ந்தவை இவரை அணையாது
அளித்தல் உன்னுடன் அன்னவர் தளையவர்;
அளியர், ஏழையர்; நினையலால் பிறகதி

ரலாதவர்; நன்ப ! ரிப்பணி மற்றவை
அல்லவா? உரிதி! ஆணையின் கரங்கொடு!
(கிரயன் கை கொடுத்தல்)
நன்ப; நன்று நன்று நின்னயம்;
கன்மனி காள்! நர் காலம் கழிய
அறிபவை பலவுள; அதன்முன் அறியின்
பொருத்தல் அரிதே ருப்பினும் இறைவனை
றைஞ்சும் போதுநீர் ரப்பதற் கொன்றுண்டு;
நல்ல வாழ்விலும் நலிந்தோ றிறந்தோ
வாழும் வகையினை வேண்டல் வேண்டாம்.
வாழ்விர் நந்தையின் மேம்பட ினிதே.

கிர: புக மனையகம். போதுமும் மொழிகள்.

ஈடி: அகமதற் கினங்குமோ?

கிர: எதற்குமோர் அளவுண்டு.

ஈடி: ஆயின்நின் ஆனை எனக்குண்டு அல்லவோ?

கிர: என்னதவ் ஆனை-?

ஈடி: வெளிச்செல எனக்குமுன்
அளித்தநல் ஆனை.

கிர: நம்மிறை அதற்கோர்,
மொழினைக் கருள்வன், என்செயல் ஒன்றிலை.

ஈடி: என்பொருட்டு றையோர் ஏதும் புகலார்.

கிர: எனின் நீர் வேண்டியது எய்துவீர் திண்ணம்.

ஈடி: ஊன்றன் சைவும் ஒன்றுமோ?

கிர: அறிவு கடந்தவை பற்றிநான் பேசிடேன்.

ஈடி: (திருப்தியுடன் ஆயின் வெகுப்புடன்)
ிட்டுச் செல்க.

கிர: நடக்க; நன்று.
(ஈடிபசு மக்களை அனைத்தவாறு அரன்மனை நோக்கி நடக்கிறான்)
ஆயின் மக்களை விட்டுச் செல்க.

ஈடி: என்னிட மிருந்தென் மக்களைப் பிரித்தல்
நன்றன்று; வேண்டாம்.

கிர: ினிநீ ஆனை
யிடுவதை விடுக. படிந்தினி ழுக.
உமதர சென்றோ ழிந்தது வார்க்.
(ஈடிபசு ிட்டுச் செல்லப்படல்)

குழு: தீபசு நன்னகர்ச் செல்வீர்; கேட்க;
யாவரும் போற்றுமெம் ஈடிபசு எனும்பேர்
மன்னவன் ியன்றெழு மாபெரும் சூழ்ச்சிகள்
என்பவை வீழ்ந்திடும் வெல்திறன் வாய்த்தவன்;
பொன்பூத்த செல்வத்தில் மன்பதை எல்லாம்
மனமுங்கும் பாங்கினன்; யினும் நேர்ந்ததென்?
அன்னவன் வாழ்வினில் என்னரும் ன்பங்கள்.
ின்ன நிலைமையை எண்ணிடில் மாடன்
எல்லுமே தாலுமு வண்ணலை நெஞ்சினில்
உன்னுவன் அவ்வனோ? அன்றியும் பார்மிசை
தானிரு காட்டிற்குத் தான் பெரும் ின்பினை
னொரு கொண்டுசெல் நார்வரை, யாரையும்
ின்பம் உழந்தவர் என்பர் சாலுமேர் !

நன்றியுரை

இந் நூலினை மொழிபெயர்த்து தந்த திரு. இ. இரத்தினம் அவர்களுக்கும் இந்நூலை வெளியிட்ட செய்யுப் களத்தினருக்கும் நன்றிகள் பல.

இந் நூலினை அழகுற தட்டச்சுப் பொறித்த செல்வி. லி. மகாலிங்கம் அவர்களுக்கும்

இந் நூலினை அழகுற நூலுருவாக்கம் செய்து தந்த இணுவில் அம்மா அச்சகத்தினருக்கும் உளம் கனிந்த நன்றிகள்.

இந் நூலை உருவாக்க வேண்டும் என்ற பெரு விருப்புக் கொண்ட போது, பல வகையிலும் உந்து சக்தியாக இருந்து உதவிவரும் எமது பாடசாலை அதிபர் திருமதி. வி. பசுபதிப்பிள்ளை அவர்களுக்கும் என் நன்றிகள் பல.

- நன்றி -

30.08.1996

திரு. க. ஸ்ரீகந்தவேள்
ஆசிரியர்.
மானிப்பாய் மகளிர் கல்லூரி.

தெஸ்பியன் கல்வி நிலையம்

கே. கே. எஸ். வீதி, இணுவில்

A\L 97, 98, 96 மீட்டல்

கணித, விஞ்ஞான, கலை, வர்த்தக வகுப்புகள்

கடைபெறுகின்றன

கணித, விஞ்ஞானம் பிரிவு

பௌதிகவியல்	○	திரு. M. A. சுபநாதன்
இரசாயனவியல்	○	திரு. ம. எட்வேட்
விலங்கியல்	○	பிரதம ஆசிரியர்
தாவரவியல்	○	திரு. அ. தயாபரன்
தூய, பிரயோக கணிதம்	○	திரு. வாசுதேவன்

கலைப்பிரிவு

தமிழ்	○	திரு. N. பாலா
இந்துநாகரிகம்	○	திருமதி S. தேவதாசன்
இந்துசமயம்	○	திரு. க. சதுர்த்தியகரன்
நாடகமும் அரங்கியலும்	○	திரு. க. ஸ்ரீகந்தவேள
அளவையியல்	○	திரு. க. உதயராஜன்
பொருளியல்	○	திரு. இ. துரைசிங்கம்
புவியியல்	○	திரு. S. S. வாசன்
அரசியல்	○	திரு. க. இளங்கோ
ஆங்கிலம்	○	திரு. சோ. பத்மநாதன்
சித்திரம்	○	திரு. க. ரட்னேஸ்வரன்
சமஸ்கிருதம்	○	செல்வி. இ. விமலா

நிர்வாகி